[illegible] 16. விலை 2 அணா. REGD NO. 4642

திராவிடநாடு

மலர் 12 | 27—6—54 | இதழ் 52

நாம் நாஸ்திகர்கள் அல்ல பகுத்தறிவுவாதிகள்

பொதுவுடைமைவாதி தனியுடைமை காணும் விசித்திரம்

எதிர்ப்பினால் சோர்வடையாதீர் உள்ள உரங்கொண்டு பணிபுரிய வாரீர்

வடார்க்காடு மாவட்ட சமூக சீர்திருத்த மாநாட்டில் ஈழத்தடிகளின் தலைமையுரை

தோழர்களே!

இன்று இங்கு நடைபெற இருக்கும் சமூகசீர்திருத்த மாநாட்டிற்கு, என்னைத் தலைமை தாங்கும் ஏற்பாட்டினை உண்டாக்கி வைத்த வடார்க்காடு மாவட்டத் திராவிடமுன்னேற்றக் கழக வரவேற்புக் குழுவினர்க்கும் ஏனையோர்க்கும் என் நன்றியறிதலை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

1938-ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்ட வெற்றிக்குப் பின்னர், நான், என் உடல் நிலையின் காரணமாக, ஓரிடத்திலேயே தங்கியிருந்து—அதுவும் இயக்கப்பணியை நன்றாகச் செய்யும் இடமாகப் பார்த்து—அங்கேயிருந்துகொண்டு என்னாலான இயக்கத் தொண்டினை,

என்னால் முடிந்தவரை செய்து கொண்டிருக்கிறேன். அதிலும், அண்ணாவின் அணைப்பின் கீழ் இருந்து பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றிருப்பதே பெரும் பேறெனக் கருதிக்கொண்டிருக்கும் என்னை, வயது முதிர்ந்து, நோய்வாய்ப்பட்டு, சில மணி நேரங்கூட நின்று பேச முடியாத நிலையிலிருக்கும் என்னை வடார்க்காடு மாவட்டத்தினர், இந்த மாநாட்டிற்குத் தலைமைதாங்கும்படி கேட்டு இந்தப் பொறுப்பினைத் தந்தது, அவர்கள் என்பால்கொண்டுள்ள பேரன்பென்றே நான் கருதுகிறேன். அவர்களின் அன்பிற்கு மீண்டும் எனது நன்றி.

திராவிட முன்னேற்றக் கழகத்தாராகிய நாம், கழகம் கண்ட நாளிலிருந்து, இரண்டு மாநாடுகளை இரண்டு நாட்களில் நடத்தி வருகிறோம். ஒன்று சமூக சீர்திருத்த மாநாடு; இன்னொன்று அரசியல் மாநாடு; முதல் நாள் நடப்பது சமூக சீர்திருத்த மாநாடு: இரண்

டாவது நாள் நடைபெறும் அரசியல் மாநாடு இப்படி இரண்டு மாநாடுகள் தேவையா? அவசியமா? என்ற ஐயப்பாடு சிலருக்கு இருக்கலாம். மற்ற அரசியல் கட்சிக்காரர்கள், இப்படியெல்லாம் இரண்டு மூன்று மாநாடுகளை நடத்துவதில்லையே. இவர்கள் மட்டும், ஏன் இரண்டு மாநாடுகளை நடத்துகிறார்கள் என்றும் சிலர் கேட்கலாம். அதிலும், முதலில் சமுதாயம், பிறகு அரசியல் என்று ஏன் நடத்தவேண்டும்?—என்ற ஐயப்பாடும் சிலருக்கு ஏற்படாமலிருக்காது.

மற்றக் கட்சிக்காரர்கள், அரசியல் ஒன்றினால் மட்டுமே எல்லாக் காரியங்களையும் சாதித்துவிடலாம் என்ற நோக்கத்தோடு வேலை செய்பவர்கள். நாம் அப்படியல்ல. சமுதாயத்திலுள்ள குறைபாடுகள் நீங்கினாலொழிய—நீக்கப்பட்டாலொழிய நல்லதொரு அரசியலைக் காண முடியாதென்ற நம்பிக்கை கொண்டவர்கள். திருந்திய சமுதாயத்தினால்தான் நேர்மையான அரசியலைக் காண முடியும்—நடத்த முடியும்—என்ற அசைக்க முடியாத நம்பிக்கையைக் கொண்டவர்கள். அதனாலேயேதான், முதலில் சமுதாயம், இரண்டாவது அரசியல் என்று பிரித்திருக்கிறோம். அது மட்டுமல்ல, முதலில் சமுதாயம் இரண்டாவதுதான் அரசியல் என்று பிரித்து வைத்திருப்பதற்கு இன்னொரு காரணமும் உண்டு. அதாவது, அரசியலைவிட சமுதாயத்துக்கே அதிக மதிப்புக் கொடுப்பவர்கள் நாம். திருந்திய சமுதாயத்தை, யார் ஆட்சிபுரிந்தாலும் பாதகமில்லை என்று இருப்பவர்கள் நாம். காரணம், திருந்திய ஒரு சமுதாயத்தை எந்த அரசியல்வாதியும் தன் பக்கம் இழுத்துவிட முடியாது. அதனாலேயே, நாம் அரசியலைப்பற்றி அதிக கவனம் எடுத்துக்கொள்வதில்லை. அரசியலிலே பொருளாதாரம்தான் மிக முக்கியமாகக் கருதப்படுவது. திருந்திய சமுதாயம், பொருளாதார ஏற்றத்தாழ்வுக்கு ஒருபோதும் இடமளிக்காது. எனவேதான் சமுதாயத்தைத் திருத்தியமைக்கும் பணியை நாம் முதன்மையாகக் கொண்டிருக்கிறோம். இதனை, நம்மைப்பற்றித் தவறுதக் கணக்குப் போட்டுக்கொண்டிருப்பவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

சமூக சீர்திருத்தம் என்பதற்கு பலர் பலவாறுப் பொருள் கொண்டபோதிலும், பல வகையாகப் பிரிந்து பிளவுபட்டுக்கிடந்து அவதியுறும் நம் இன மக்களை—திராவிட மக்களை—ஒன்றுபடுத்தி, நாமெல்லாம் ஓர் இனம் என்று கருதும்படி செய்வதையே சமூக சீர்திருத்தம் என்று நாம் கொள்கிறோம். ஒரு காலத்தில் ஓர் இனமாக ஒற்றுமையுடன் வாழ்ந்த நாம், இடையில் சாதியால் ஏன் பிளவுபட்டோம் என்பதை ஆராயும்போது, இதற்கு முதற்காரணமாய் இருப்பவை மதமும் கடவுளும்தான் என்பதை அறிய முடிகிறது. மதம்—கடவுள் என்பனவற்றின்மேல் புகுத்தப்பட்ட இயற்கைக்கு மாறான கொள்கைகள்தான், நம்மையெல்லாம் இந்நிலைக்குக் கொண்டுவந்து விட்டனவாகும். இந்த உண்மையை எல்லோரும் உணர்ந்து ஒப்புக்கொண்டுவிட்டால், இப்பொழுதுள்ள நிலைமையும் பிளவுகளும்—அதன் காரணமாக ஏற்படும் சச்சரவுகளும் இல்லாதொழியும் என்பது எனது கருத்தாகும்.

ஆண்டவனைப் பாதுகாப்பதற்கு மதம் என்னும் அரணும், மதத்தைப் பாதுகாப்பதற்கு புராண இதிகாசங்கள் என்னும் மதிற்சுவரும் சுற்றியமைக்கப்பட்டிருப்பதை மக்கள் அறியவும் அதைப்பற்றி ஆராயவும் தொடங்கிவிட்டால்—எங்களையும் பிற உயிர்களையும் படைத்துக் காத்து இரட்சிப்பதாகச் சொல்லப்படும் ஆண்டவனுக்கு இத்தனைப் பாதுகாப்புகள் எதற்காக? எங்களைப் படைத்த ஆண்டவனை, நாங்களே அறியும்படி செய்ய முடியாத ஆண்டவன், தன்னை அறிவிப்பதற்கு ஒரு மதத்தையும், அதனை விளக்குவதற்குப் புராண இதிகாசங்களையும், இவற்றை விளக்குவதற்கு சமயவாதிகளிலேயே சிலரையும் ஏற்பாடு செய்திருக்கின்றானே! தன்னைத் தானே பாதுகாக்க முடியாமல், அதற்காக வேறு சில ஏற்பாடுகளை உண்டாக்கி வைத்துக் கொண்டிருக்கும் ஒரு ஆண்டவன், எங்களையெல்லாம் படைத்துக்காத்து இரட்சிக்கின்றான் என்று சொல்லப்படுவதை நாங்கள் எப்படி நம்ப முடியும்—ஒப்புக்கொள்ள முடியும்—என்று மக்கள் எல்லோருமே சிந்திக்கத் தொடங்கிவிட்டால் நம்முடைய இலட்சியம் விரைவில் கைகூடும் என்பதில் ஐயமில்லை.

ஒரு காலம் இருந்தது, மதக் கோட்பாடுகள் எப்படியிருந்தாலும் அவை யாரால் சொல்லப்பட்டிருந்தாலும் அவற்றை மக்கள் அப்படியே நம்பவேண்டும்—நம்பாவிட்டால் நரகம் என்று. இந்த நிலைமைகளிடம் மாறுமலிருந்த காலம் வரை மதப் புலவர்கள் பாடு மிகவும் கொண்டாட்டமாகவே இருந்தது. மதக் கோட்பாடுகளை மக்களிடையே பரப்புவதற்குத் தாங்கள் எதை—எப்படிக் கூறினாலும் அவற்றையெல்லாம் மக்கள் நம்பித் தொழுவார்கள் என்ற எக்களிப்பு, அவர்களை எதை வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் எழுதும்படியும் பேசும்படியும் செய்தது. இப்படியெல்லாம் இல்லாததையும்—இருக்க முடியாததையும்—இருக்கவேண்டிய அவசியம் இல்லாததையும், இயற்கைக்கு மாறாகவும், அறிவிற்கு ஒவ்வாததாகவும் எழுதினோமே, இவற்றை மக்கள் நம்புவார்களா? நம்பும்படி செய்வது முறையா? மக்கள் நம்புவது ஒருபுறம் இருக்கட்டும். இவற்றை எழுதுகின்ற நாமாவது இக்கதைகளை நம்புகிறோமா? நாமோ அன்றிப் பிறரோ நம்பக்கூடிய முறையில் நம்மால் எழுதப்படும் கதைகள் அமைகின்றனவா? என்றுகூட எண்ணிப் பார்க்க நேரமும் அறிவும் இல்லாத நிலையில், அவசர அவசரமாக ஆயிரக்கணக்கான அண்டப் புளுகுகளை ஆண்டவன் பேரைச்சொல்லி எழுதிவைத்துவிட்டனர். இதனை மக்களில் ஒரு சிலர் ஆராய்ந்து பார்க்க ஆரம்பித்து அதிலுள்ள ஆபாசங்களை உணர்ந்து அவைகளை மறுக்கத் தொடங்கியதோடன்றி, அவைகளை அவனிக் கெடுத்துரைக்க ஆரம்பித்ததைக் கண்ட மதப்புலவர்களும் பாவலர்களும் உண்மையைக் கூறுவதற்கு முன் சில காலம்வரை பொய்தான் பேசியாகவேண்டுமென்ற அடிப்படையை முதலாகவைத்தோ என்னவோ ஆண்டவனுக்கும், மதத்திற்

ளும் மதநூல்களுக்கும் வேறு வேறு விதமான பொருள்களும் விளக்கங்களும் விரிக்கத் தொடங்கினர். மதம்—கடவுள்பற்றி அன்று எழுதி வைத்த கட்டுக் கதைகளில் சீர்திருத்தம் காணமுயல்வது மணற்சோற்றில் கல்ஆராய்வது போன்று முடியுமேயன்றி, யாதொரு பயனையும் அடைந்துவிட முடியாது என்பதைக்கூட எண்ணிப் பார்த்து உண்மை காண முடியாத நிலையில் மதப் புலவர்கள் இன்னும் உள்ளனரே என்று எண்ணும்போது நமக்கு அவர்கள்பால் இரக்கம் உண்டாகிறது.

புராண இதிகாசங்களிலுள்ள சம்பவங்களுக்கு, நான் ஒரு பொருள்கூறினால் அதை மறுத்து இன்னொருவர் இன்னொருபொருள் கூறுவர் இந்த இருவருடைய கருத்துக்களையும் மறுத்து வேறொருவர் வேறொரு விதமான கருத்தைக்கூறுவார் ஒவ்வொருவர் கூறுவதும் ஒவ்வொரு சாராருக்குச் சரியென்றே தோன்றும். மொத்தத்தில் யார் கூறுவதையும் எல்லோரும் ஒத்துக் கொள்ள மாட்டார்கள். உதாரணமாக காஞ்சிபுரத்தில் நடைபெற்ற ஒரு சம்பவத்தைக் குறிப்பிட விரும்புகிறேன்.

பிள்ளைக்கறிசமைத்துக் கொடுத்த சிறுத்தொண்டரைப்பற்றிய ஒரு சொற்பொழிவு காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயிலில் ஒரு சமயம் நடைபெற்றது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின்பேராசிரியராகஇருந்த சிதம்பரநாதன் அவர்கள், சிறுத்தொண்டன் ஒரு போர்வீரனாக இருந்த காரணத்தால் தான், மனம்கூசாமல் பிள்ளையைக்கொல்லச்சம்மதித்தான். ஆனால், சீராளனின் தாயார் மனக்கலக்கத்தோடேயே மகனைக்கொல்லும் அந்தக்காரியத்தைச்செய்ய இசைந்தாள் என்பதை சேக்கிழாரே ஒப்புக் கொண்டிருக்கிறார் என்று குறிப்பிட்டுப்பேசினார். இதனைக் கேட்டுக் கொண்டிருந்த பிரசங்கி புரிசை—முருகேசனார் வெகுண்டெழுந்து. சிதம்பரநாதரின் உரையை மறுத்தார். பிரசங்கத்தைக் கேட்கக்கூடியிருந்த பக்தர்கள், யார் கூறுவது மெய்யென்பதை அறிந்துகொள்ள முடியாது திகைத்தனர்.

எனவேதான், மத நூல்களில் குறிப்பிடப்படும் சம்பவங்களைத் துக்கொண்டு சீர்திருத்தங்காண முயன்றால், அவற்றிற்கு ஒருபோதும் முடிவு ஏற்படாது. காரணம் அவையெல்லாம் கற்பனையென்பதேயாகும் கற்பனை—கற்பிக்கக் கூறப்படுவது—இல்லாத ஒன்றை இருப்பதாகக் கொள்ளவேண்டுமென்று இட்டுக்கட்டிக் கூறுவது. அப்படிக் கூறப்படும் கற்பனைச் சம்பவம், ஒவ்வொருவர் கருத்துக்கும் ஒவ்வொரு விதமாக உருவெடுக்கும். ஒன்றுக்கொன்று மாறுபடும் கருத்துக்களையும், முன்னுக்குப்பின் முரண்படும் கொள்கைகளையும், சொல்வோர்—கேட்போர் ஆகிய இரு சாராருக்கும் 'இதுவா, அதுவா' என்ற மயக்கத்தைத்தான் மத நூல்களில் காண முடியும் நூல் ஆதாரங்காட்டி, சந்தேகங்களை நீக்கிக் கொள்வதென்பது மீண்டும் மீண்டும் சந்தேகத்தையே வளர்ப்பதாகும். எனவே, காலநிலைக்கும், மக்களின் அறிவு வளர்ச்சிக்கும், இயற்கைப் பண்பிற்கும் ஒத்துவரக்கூடியதான உண்மையை உணரும்படி செய்வது தான் முறையாகுமேயன்றி. சங்கற்பவாதிகள்போல் தங்கள் கைச்சரக்கைக் காட்ட முயல்வது தமக்கும் பிறர்க்கும் கேடு செய்யும் ஒரு பெருங்குற்றமாகும். இப்படிப்பட்ட பெருங்குற்றங்களை மதவாதிகளும். புராணப்பிரசங்கிகளும் செய்வது போதாதென்று. அரசியல்வாதிகளும் செய்ய முற்பட்டுவிடுகிறார்களே என்பதை எண்ணும்போது தான், இத்தகைய சீர்திருத்த மாநாடுகள் மிகமிக அவசியம் என்று நாம் உணர்கிறோம்.

மற்ற எந்தக் கட்சியாரின் கொள்கைகள்—திட்டங்கள் எவ்வளவு நல்லவையாக—மக்கள் வாழ்வுக்குப் பயனளிப்பவையாக இருந்தாலும், அவற்றையும், அவற்றை வகுத்தவர்களையும் தாக்குவதைத்தான் தங்களின் பொதுவுடைமைத் தத்துவம் என்ற முறையில். உடம்பில் ஜீவன் இருந்தும், பேச்சிலும் எழுத்திலும் ஜீவன் இல்லாததைத் தெளிவாக விளக்கி. இதுதான் எங்கள் 'ஜீவா'தாரக் கொள்கை—ஷெல்லியை உச்சரிக்க வாயாலேயே கம்பனையும் உச்சரிப்போம்—மேடையிலே மார்க்ஸைக் காண்போம்—மாடியிலே மற்றவர்களைத் தாக்கும் திட்டங்களை வகுப்போம் என்ற போக்கில் நாட்டை நாசப் பாதைக்கு இட்டுச் செல்லும் இந்நாட்டுப் பொதுவுடைமைவாதிகளின் மத்தியில் நின்றுகொண்டு சீர்திருத்தத் துறையை அடையும் பகுத்தறிவுப் பாதையைச் செப்பனிட்டுவரும் நம் முயற்சி, எக்காலத்தைப் போன்று அவ்வளவு கஷ்டமுடையதுதான் என்று நான் சொன்னால் நீங்கள் ஆச்சரியப்படக்கூடாது.

அண்மையில், காரைக்குடியில், கம்பன் விழா நடைபெற்றது. அதில், நம் நாட்டுப் பொதுவுடைமைவாதி ஒருவரும் கலந்து கொண்டார். அப்படிக் கலந்து கொண்டவர் கம்பனைப்பற்றி ஏதாவது பேசியிருந்தால், நாம் கவலைப்பட மாட்டோம். அசல் மதப் பிரசங்கிபோலப் பேசியிருப்பதுதான், அவரைப்பற்றி சிறிது பேசவேண்டிய நேரிட்டுவிட்டது. ஷேக்ஸ்பியரிலிருந்து ஷாவரை உலகத்திலுள்ள அத்தனை அறிஞரும் கம்பனுக்கு ஈடாகார் என்ற முறையில் பேசித் தீர்த்துவிட்டார். கம்பனைப் [illegible] சமத்துவம் காணும் இந்தப் பொதுவுடைமைவாதி, கம்பனுக்குத் தனியுடைமை கண்ட போக்கு வேடிக்கையாகவே இருக்கிறது. கம்பராமாயணத்தில் பேசப்படும் இராமன், 'மனித வர்க்கத்தின் விடுதலைக்காக, மனித வர்க்கத்தின் இன்பத்திற்காக தன்னையே சர்வசங்க பரித்தியாகம் செய்யும் குணவானாக அமைத்திருக்கிறான்' என்று பேசியிருக்கிறார் இராமனால் விடுதலையடைந்த மனித வர்க்கம் எதுவென்பதை இவர் விளக்கவில்லை. அந்த விமோசன இன்பத்தை இராமனால் விடுதலையடைந்த மனிதவர்க்கம் நுகர்ந்தது என்பதற்கும் விளக்கம் காணவில்லை. மேடையதிரப் பேசி, காது செவிடுபடக் கைதட்டலைப் பெற்றதைத் தவிர, இப்படிப்பட்ட பேச்சினால். பேசியவரோ, கேட்டவர்களோ அடைந்தபயன் யாதோ? மனித வர்க்கத்தின் விடுதலைக்காகவே இராமன் பாடுபட்டான் என்பதற்குச் சான்றாக, சம்ப ராமாயணத்திலும் சரி, வால்மீகி ராமாயணத்திலும் சரி, ஒரு வரி

கூட எடுத்துக்காட்ட முடியாது என்பதை நான் உறுதியாகக் கூறுகிறேன். இன்னும் இந்தப் பொதுவுடைமைவாதி கம்பனைப்பற்றியும் இராமனைப்பற்றியும் பேசியுள்ள புகழுரைகளை எல்லாம் எடுத்து விளக்கப்போனால், இந்தக் குறுகிய காலம் அதற்கு இடந்தராது. எனவே, இன்னும் ஒரு நிகழ்ச்சியை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். மனித வர்க்கத்தின் விடுதலைக்காகப் பாடுபட்ட இராமனைப் பாடிய கம்பன், ஏழைப் பாட்டாளி மக்கள் சார்பிலே நின்று பணியாற்றியிருக்கிறான் என்று உதாரணம் காட்டி ஒரு பாடலைக் குறிப்பிட்டிருக்கிறார்.

மேழி பிடிக்குங்கை
  வேல்வேந்தர் நோக்குங்கை
ஆழி தரித்தே அருளுங்கை —சூழ்வினையை
நீக்குங்கை என்றும்
  நிலைக்குங்கை நீடுழி
காக்குங்கை காராளர் கை.

என்று ஏர் பிடித்து உழும் உழவர் பெருமக்களை ஏற்றிப் போற்றிப் பாடியிருக்கிறான் என்று கூறிவிட்டு, அந்த உழவர் பெருமக்களைப்பற்றி மேலும் உயர்வாகப் பாடியதாக மற்றொரு பாடலையும் எடுத்துக்கூறவந்தவர் என்ன காரணத்தாலோ பாடல் முழுவதையும் கூறாமல், பாடலின் கடைசி வரியின் இரண்டு வார்த்தைகளைமட்டும் உச்சரித்துவிட்டு நிறுத்திக்கொண்டார். உழவர் பெருமக்களின் பெருமையைக் குறித்து கம்பர் பாடியதாகக் கூறப்படும் இரண்டு பாடல்களில் ஒன்றை முழுவதும் சொல்லிவிட்டு, மற்றொரு பாடலை ஏன் அரைகுறையாகச் சொன்னார். நேரமில்லையா? பத்திரிகையில் போட இடமில்லையா காரணம் என்ன? காரணம் கூறுவதாக இருந்தால், இந்த இரண்டு காரணங்களைத் தவிர வேறெதுவும் கூற முடியாது. கம்பன் பாடியிருக்கிறான் முழுப் பாடலையும். ஆனால், கம்பனில் பொதுவுடைமை காண வந்த நமது நண்பரால் முழுப் பாடலையும் கூறமுடியவில்லை—தெரியாததால் அல்ல—கருத்துத் தெளிவில்லாததால்—இசைப்பால்! அந்தப் பாடல் முழுவதையும் பாடியிருந்தால், மேடையிலிருந்து எங்கே தன்னை விரட்டிவிடுவார்களோ என்ற அச்சம் அவரைத் தாக்கியதால்தான், பாடலை இரண்டு வார்த்தைகளோடு நிறுத்திக்கொள்ளும் நெருக்கடியான நிலைமைக்கு ஆளாகிவிட்டார். இதோ அந்தப் பாடல்:-

செட்டிமக்கள் வாசல்வழி
  செல்லோமே செக்காரப்
பொட்டிமக்கள் வாசல்வழி
  போகோமே—முட்டிபுகும்
பார்ப்பா ரகத்தைஎட்டிப்
  பாரோமே எங்கோனும்
காப்பாரே வேளாளர் காண்

இந்தப் பாடல் முழுவதையும் ஏன் அவர் பாடவில்லையென்ற காரணத்தை இப்பொழுது நீங்கள் புரிந்துகொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன். உலகத் தொழிலாளிகளின் ஒற்றுமைக்காகப் பாடுபடும் இந்தப் பொதுவுடைமைவாதி, அதே உலகத்திலிருக்கும் செட்டியையும் செக்காரனையும், முட்டிபுகும் பார்ப்பானையும் ஏன் அந்தத் தொழிலாளரின் பட்டியலில் சேர்க்கவில்லை? ஒருவேளை அவருடைய சகாவான தோழர் இராமமூர்த்தி போன்றவர்கள் கோபிப்பார்களோ என்ற பயத்தால்போலும்! எப்படியோ போகட்டும்!—அது அவருடைய சொந்த விஷயம். ஆனால், பொதுவுடைமை பேசும் ஒருவர், இப்படித் தனியுடைமை பேச நேர்ந்தது குறித்துத்தான் இரண்டொரு வார்த்தை கூற நேர்ந்தது.

எனவேதான், புராண இதிகாசங்களில சீர்திருத்தம்காண முயன்றால், நண்பர் ஜீவானந்தம் அடைந்த நிலையைத்தான் அனைவரும் அடைய நேரிடும். புராண இதிகாசப் பேச்சுக்கள், எப்பொழுதுமே சந்தர்ப்பத்தையும் சூழ்நிலையையும் அனுசரித்துப் பேசி தப்பித்துக் கொள்ளும் ஒரு நிலையைத்தான் உண்டாக்கும். ஆகவேதான், நாம் ஒரு புதுப் பாதையைக் கண்டுபிடித்துச் சமூக சீர்திருத்தத்தை கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாகவே செய்து வருகிறோம். அந்தப் பாதைக்குத்தான் பகுத்தறிவு என்று பெயர். பகுத்தறிவு பொதுவாக எல்லோருக்கும் இருந்த போதிலும், அதனைச் சீர்திருத்தம் என்கின்ற துறைக்கு பாதையாக்கப் பலர் இன்னும் பயப்படுகிறார்கள். அதனால், ஒரு குறிப்பிட்ட தொகையினராகிய நாம்தான், அந்தப் பாதையைச் செப்பனிடவேண்டியிருப்பதாலேயே சாக்ரடீஸ்காலத்திலிருந்த கஷ்டங்களும்சங்கடங்களும் இன்றும் நமக்கு இருப்பதாக நான் முன்பே குறிப்பிட்டேன். அந்தக் காலத்தைப் போன்ற கடுமையான சோதனைகளுக்கு நாம் ஆளாகவில்லை என்ற போதிலும், பகுத்தறிவுப் பாதையினைச் செப்பனிடுவதிலுள்ள கஷ்டங்களும் தொல்லைகளும் இக்காலத்துக் கேற்றதண்டனையை நமக்குத் தராமலில்லை. விஷக்கோப்பை நம் கையில் தரப்படவில்லை என்றபோதிலும், கல்லாலும் சொல்லாலும் நாம் தாக்கப்படாமலில்லை. காலமும் கருத்தும் மாற மாற தண்டனையின் தரம்—அதாவது அளவு—மாறியிருக்கிறதே தவிர, இந்தத் துறையில் விசேஷமான மாறுதல் எதுவும் ஏற்படவில்லை என்றேகூற வேண்டும். என்ற போதிலும், அந்தப் பணியை, விடாது நாம் செய்து வருகிறோம்.

கடவுள், மதம்பற்றி, நாம் எதாவது கருத்துக்களை வெளியிடும் போது, அவை ஏற்கனவே மதத்துக்கும் கடவுளுக்கும் வகுக்கப்பட்டுள்ள கருத்துக்களுக்குமாறுபட்டுக் காணப்பட்டால், உடனே நமக்குநாத்திகப் பட்டம் சூட்டி விடுகிறார்களேயன்றி, நாம்கூறுவதில் உண்மையிருக்கிறதா என்று அறியும்அவகாசத்தை அவர்கள் தங்கள் அறிவுக்கு அளிப்பதில்லை. இந்த அவகாசம் அளிக்கும் இயல்பை நம்மவர்களில் பெரும்பாலோர்பெற்றுவிட்டால், நம்முடைய பயணம் இன்றிருப்பதைவிட துரிதமாகவே நடைபெறும். அதுவரை பயணத்தை நிறுத்திவைக்காத சிறந்தபண்பை நாம் கைவிட்டுவிடக் கூடாது. நாளாவட்டத்தில், நம்முடைய பாதையில் செல்வோரின் எண்ணிக்கை வளர்ந்து வருவதைக் காண்கிறோம்; மகிழ்ச்சியடைகிறோம். சில மாஜிப் பகுத்தறிவுவாதிகள் அவ்வப்போது செப்பனிடப்பட்டநமதுபாதையில் கல்லையும்மண்ணையும் போடப்பார்க்கிறார்களே ஒழிய, மதப்பற்றுடையோர் தொலைவில்நின்றுகொண்டு, பாதையை எப்படிச் செப்பனிடுகிறீர்கள், எவ்வளவு தொலைவு செப்பனிட்டுவிட்டார்கள்,

நாமும் அந்தப்பாதையில் செல்லலாமா என்று பார்க்கிறார்கள். அது மட்டுமல்ல, மதத்தின் பாதுகாவலராகிய ஒரு புராணப் பிரசங்கியை எடுத்துக்கொள்ளுங்கள். அவர், ஒரு புராணத்தைபற்றிப் பிரசங்கம் செய்யும் பொழுது, அதில் யாதாவதொரு சம்பவத்தைக் குறிப்பிடுகையில் இப்படியெல்லாம் நான்சொல்லவில்லை, புராணம் கூறுகிறது' என்று கூறித்தப்பித்துக்கொள்ளும்கட்டத்துக்கு வந்திருக்கிறார். இது பகுத்தறிவுப் பாதையைச் செப்பனிடும் போது, நம்மால் கையாளப்படும் நேர்மையால் ஏற்பட்ட பலன் என்பதை யாரும் மறுக்கமுடியாது.

கடவுளைப்பற்றியோ மதத்தைப் பற்றியோ ஏதாவது நாம் கூறநேரிடும்போதெல்லாம், எவருடைய மனமும் இதனால் புண்படக்கூடாதென்பதைத் தான் முதலில் மனதில் நிறுத்தி பேசுவது நமது பண்பாகும்.

மண்ணை வெட்டிக்கொண்டிருந்தவன் மண்ணுக்குள் மண்ணெண்ணெய் இருப்பதைக்கண்டு பிடித்தான்—என்பது போல், இன்னகாரியத்தை இதற்குமுன்செய்து கொண்டிருந்த கடவுள், இப்பொழுது இந்தக் காரியத்தையும் செய்தார் என்று ஒரு மதவாதி கூறுவாரானால இப்பொழுது இந்தஉலகத்தில்காணப்படும் உயிர்களும், பிறவும், இதற்கு முன் எங்கே இருந்தன—மண்ணுக்குள் மண்ணெண்ணெய் இருந்தது, மண்ணைவெட்டியபிறகு தெரிந்தது—என்பதுபோல், கடவுளின் படைப்புக்கு முன் உயிர்களும் மரஞ்செடிகொடிகளும் எங்காவது ஓரிடத்தில் இருந்திருக்க வேண்டுமே! என்று கேட்டால், அதில்என்னதவறிருக்கமுடியும்? இதனால் எவருடைய மனமாவது புண்படுமென்று கூறத்தான் முடியுமா?

சமூக சீர்திருத்த மாநாட்டிலே, கடவுளைப்பற்றி ஏன் இவ்வளவு தாம்பேசவேண்டும் என்று சிலர் நினைக்கலாம். நான் ஏற்கனவேகுறிப்பிட்டபடி, சமூக முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ளவை கடவுளும் மதமும்தான் என்பதை எந்தப் பகுத்தறிவுவாதியும் மறுக்க முடியாது. கடவுளும் மதமும்தான் மனிதனின் தன்னம்பிக்கையை மாய்த்துவிட்டது 'நீ உன்னை நம்பாதே—கடவுளை நம்பு' என்றுதான் மத நூல்கள்கூறுகின்றன. மதநூல் கூறும் இக் கோட்பாடுகளை ஒப்புக்கொண்டு மனிதன் கடவுளை நம்ப என்று ஆரம்பித்தானோ அன்றைக்கே அவன் தன்னம்பிக்கையை இழந்துவிட்டான். இப்படி மனிதன் தன்னுடைய தன்னம்பிக்கையை இழந்த காரணத்தால் தான், அவன் இன்று எடுப்பார் கைப்பிள்ளையாக இருக்கிறான். ஒருவன் மாடியில் வாழ்கிறான்; இன்னொருவன் தெருக்கோடியில் குடிசையில் வாழ்கிறான். ஏன் இந்த நிலை ஏற்பட்டது என்று எண்ணும் உரிமையை மதம் மனிதனுக்கு அளிக்கவில்லை.

(தொடர்ச்சி அடுத்த வாரம்)

ஜினிவா

அறம் வளர்க்கும் அழகூர்

காரிருளுக்கிடையே ஓர் ஒளிக்கீற்று! போர் வெறிக்கிடையே ஓர் புன்னகை! ஆதிக்க அட்டகாசத்துக்கிடையே, ஓர் அன்புப்பார்வை!! அணுகுண்டுக்காரர்களை அறநெறிக்கு அழைக்கும் ஓர் குணக்குன்று! ஜினிவா!!

கடந்த இரு தினங்களாக, உலகின் எந்தக் கோடியில் உள்ள மக்களும், ரணகளச் சூ[illegible]னைக் கொக்கரிக்கும் சிங்மன்ரீ உலவும் கொரியாவிலும், வெற்றி வீரன் ஹோ-சின்-மின் வீரப் போரிடும் இந்தோ-சீனாவிலும், மாஸ்கோ, பீகிங், டோகியோ, வாஷிங்டன், டில்லி, லண்டன் எனும் எந்தத் தலைநகரிலும், மக்கள் மிக மிக அக்கரையுடன், அச்சம் கலந்த ஆவலுடன் கூர்ந்து கவனித்துக் கொண்டுவந்தது, ஜினிவா நகரில் நடைபெற்றுவந்த சமாதானப் பேச்சினைத்தான்!

உலகில் மற்றோர் பயங்கரப் போர் ஏற்படாமல் தடுக்க, ஜினிவா வழிகாட்டுமா? குவித்துவைக்கப்பட்டுள்ள அணுகுண்டுகளை நம்பிக்கொண்டு கொக்கரிக்கும் வல்லரசுகளுக்கு, ஜினிவா நல்லறிவு புகட்டுமா? போர் வெறி தலைக்கேறிப்போய், மனித குலத்தை வெட்டி வீழ்த்தி வரும் விபரீதச் செயலை வல்லரசுகள் கைவிடுமா — ஜினிவா அந்த அறநெறியை அளிக்குமா? என்று தெளிவுள்ளோர் அனைவரும், ஒவ்வோர் நாளும் கேட்ட வண்ணம், இதழ்களைப் பிரித்து ஜினிவா தரும் செய்திகளைப் படித்து வந்தனர்.

பலன் இல்லை! தோல்விதான்! உலகின் எதிர்காலம் யாதாகுமோ—என்று துக்கத்துடன் கூறவேண்டிய கட்டம் பிறந்தது ஜினிவாவில்! ஆதிக்க ஆசை பிடித்தலையும் ஆணவக்காரர்கள், போர்வெறியை எப்படி விட்டுவிடுவார்கள், புகையும் இரத்தமும்தானே அவர்கள் கண்டு களிக்கும் காட்சிகள், அவர்களாவது சமாதானப் பேச்சிலே வெற்றி காண்பதாவது, என்று மக்கள் வெறுத்துக்கூறும் நிலையும் இருந்தது, ஆனால்ஜினிவா, ஆதிக்கக்காரர்களை அடக்குவதிலே இறுதியில் ஓரளவு வெற்றி பெற்றிருக்கிறது. முழு வெற்றி அல்ல — எனினும், பரவாயில்லை, சமாதானப்பாதை தெரிகிறது, என்று கூறத்தக்க அளவுக்கு, ஜினிவா பேச்சுகளிலே, பலன் கிடைத்திருக்கிறது. ஜினிவா, உலகுக்கு நம்பிக்கை அளிக்கும் திருநகராகக்காட்சி அளிக்கிறது. இன்று மட்டுமல்ல, நெடுங்காலமாகவே ஜினிவா, அறம்வளர்க்கும் அழகூர் ஆகவே விளங்கிவந்திருக்கிறது. அந்த நகரின் வரலாறு, எவர் உள்ளத்திலும் அறமும் அன்பும் தழைத்திடச் செய்யும் விதமாகவே இருந்துவந்திருக்கிறது.

சுவிட்சர்லாந்து நாட்டிலேமூன்றாவது பெரியநகரம், ஜினிவா.

அழகான பெரிய ஏரி, அருக

மாறும் இடத்தருகே, அமைந்திருக்கும் ஜினிவா, நீண்டகால வரலாறு உடையது. உரிமைக்காக முன்னணி நின்ற காதைகள், பகுத்தறிவுக்காகப் பாணிபாடிய சம்பவங்கள், இம்சிக்கப் பட்டவர்களுக்கு இடமளித்த இன்பச் சேதிகள் கொண்டதாகவும், அதன் வரலாறு அமைந்திருக்கிறது.

உலகை ஒரு குடையின் கீழ் ஆள வேண்டுமென்று விரும்பி வெற்றி பல பெற்ற ஜூலியஸ்-சீசர் காலமுதற்கொண்டு, உலகை நாஜிமயமாக்கத் துணிந்து கிளம்பிய ஹிட்லர் காலம் வரையில், புயலைக் கண்டு புன்னகை புரியும் புனித பூமியாக ஜினிவா இருந்திருக்கிறது. வேடன் அம்புக்குத் தப்பி வெண்புறாக்கள் வந்தபோதெல்லாம், புகலிடமாக விளங்கிற்று அந்தப் பூங்கா!

ஜூலியஸ் சீசர், வெற்றிக் கொடியை நாட்டி, விசித்திரமான கோயில்களை எழுப்பி, ஜினிவா நகரை, ரோமாபுரியின் அலங்கார அடிமைச்சாவடியாக்கினான், ஆனால் ஆற்றலுடன் உரிமைப் போரிட்டு தளைகளை உடைத்தெறிந்துகொண்டு, தன் மாசுபோக்கிற்று ஜினிவா. ஒவ்வொரு முறை ஐரோப்பிய கண்டத்திலே பெரும் ஆதிக்கக்காரன் அமளியைக் கிளப்பிவிட்டபோதும், ஜினிவா நகரம், கொந்தளிக்கும் கடலில் சிக்கி, திக்குத் தெரியாமல் தவிக்கும் மரக்கலங்களுக்கு வழிகாட்டும் மணிவிளக்குக் கூண்டென நின்றிருக்கிறது.

"ஆண்டவன், சத்யத்தை, தூய்மையை, தொண்டுகளைத்தான் மதித்து அருள்பாலிப்பான், அறிவிலிகளே! ஆண்டிக்கோலமிட்டுக் கொண்டு அரசுகளை ஆட்டிப்படைக்கும் அக்ரமக்காரன் விற்கும் அருள் சீட்டு வாங்கினால், ஆண்டவன் அருளைப் பெறமாட்டீர்கள். கிழித்துப் போடுங்கள்! கொளுத்துங்கள்! அருள் சீட்டு பெறாதீர், அறிவை இழக்காதீர்," என்று ஜிவிங்லி என்னும் தூய்மையாளர் முழக்கமிட்டது ஜினிவாவிலேதான்.

போக போக்கியத்தில் புரண்ட ஒரு போப்பாண்டவர் பாவ மன்னிப்புச் சீட்டுகளை, வண்டி வண்டியாகத் தயாரித்தது, உபதேசியார்கள் மூலம் நாடு பலவற்றில் விற்பனை செய்தபோது, அஞ்சா நெஞ்சுடன் அந்த அக்ரமத்தைக் கண்டித்து கொடுமைகளை அனுபவித்து, அறிவுக்காக, அன்புக்காக, உண்மைக்காகப் போரிட்டு வெற்றி பெற்ற ஜூவிங்லி போன்றோர்கள், ஜினிவாவிலேதான், அறிவு பீடம் அமைத்துக் கொண்டு, அறநெறி பரப்பி வந்தனர்.

16ம் நூற்றாண்டிலே, கிருஸ்தவ மார்க்கத்திலே ஏற்பட்ட புரட்சி காரணமாக, இம்சிக்கப்பட்டவர்கள், பிரான்சிலிருந்தும் இத்தாலியிலிருந்தும், புகலிடம் தேடி வந்த காலை அவர்களுக்கு அன்பிடம் அளித்தது இந்த அழகூர்தானே.

கீர்த்திமிக்க கால்வின், ஜினிவாவில்தானே, தமது பாசறையை அமைத்துக்கொண்டு கத்தோலிக்க மார்க்கத்தவரின் எதேச்சாதிகாரத்தை எதிர்த்து வெற்றி பெற்றார். ஸ்காத்லாந்திலும் இங்கிலாந்திலும் அமோகமான செல்வாக்கு அடையுமுன்னம், ஜான் நாக்ஸ் என்பார் அடைக்கலம் புகுந்த இடமும் ஜினிவாதான்.

கால்வின், தமக்கு இடமளித்த ஜினிவாவை, அறிவுக்கோட்டமாக்கினர். அவருடைய அரும்பணியால் ஜினிவா, கீர்த்திமிக்க நகராகி, கத்தோலிக்கருக்கு ரோம்! புராடெஸ்டெண்டுகளுக்கு ஜினிவா! என்ற நிலை ஏற்பட்டது.

சன்மார்க்க போதகர்களைப் பக்குவப்படுத்தும் பல்கலைக் கழகமும் கால்வின் இங்கு அமைத்தார். புகழ் பரவிற்று. ஐரோப்பா எங்குமிருந்து மாணவர்கள் இங்கு கல்வி பயிலவந்தனர். இப்போதும், சர்வதேச விவகாரப் பயிற்சிக்கூடமாக ஜினிவா விளங்குகிறது.

ஆதிக்கக்காரர்கள் மூட்டிவிடும் போரிலே, இருதரப்பிலும் பாமர மக்கள் போர்வீரராகிப் பலியாகிறார்கள் அவர்கள் குற்றுயிராகக் கிடக்கும் களத்திலே துயக்கும் போதும், பெருங்கழுகுகள் அவர்களைக் கொத்தித் தின்ன வட்டமிடும் போதும், அவர்களைக் காப்பாற்றுவதற்கு வழி இல்லையே. போரின் பயங்கரத் தன்மையால் விளையும் வேதனையை, ஓரளவுக்கேனும் குறைத்திட வழி கிடையாதா, என்று எண்ணிய டாக்டர் ஹென்றி டூனண்ட் என்பார், செஞ்சிலுவைச் சங்கம் அமைத்தது இங்கே ஜினிவாவில்தான்!

இன்று போர் நடைபெறும் போதும் செஞ்சிலுவைச்சங்கத்தார் காயமுற்றோருக்கு சிகிச்சை தர முடிகிறது — இருதரப்பும் அந்தச் சங்க நடவடிக்கைக்கு எதிர்ப்புக் காட்டுவதில்லை. இந்த தூய தொண்டு, ஜினிவாவில்தான் துவக்கமாயிற்று. ஒரு பயங்கரமான போரின் விளைவுகளைக் கண்டு வேதனையடைந்த ஸ்விட்சர்லந்து டாக்டர் ஹென்றி 1864ம் ஆண்டு அன்பையும் அறத்தையும் மதித்திடும் சிலர்களைக் கூட்டிவைத்து மாநாடு நடத்தி, செஞ்சிலுவைச் சங்கம் பிறக்க வழி செய்தார். ஜினிவாதான், இந்த, அகில உலக அமைப்புக்குத் தொட்டில்!

ஜெர்மன் கெய்சர் மூட்டிய உலகப் போருக்குப் பிறகு, உலக சமாதானத்துக்காக முதல் முயற்சி துவக்கப்பட்டதும், ஜினிவாவில்தான். சர்வதேச சங்கம் இங்குதான் அமைக்கப்பட்டது. இன்றுள்ள ஐக்கிய நாடுகள் சபையைவிட, சர்வதேச சங்கம் பலம் பொருந்தியது அல்லவென்றாலும், நற்கருத்து மிகுந்ததாகவே பணியாற்றி வந்தது.

இப்போதும், ஜினிவாவில்தான், சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனமும், உலக சுகாதார அமைப்பும் உள்ளன. சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தில், சேர, சோவியத் ரஷ்யாவும் இணக்கமளிப்பதாகவும் கூறப்படுகிறது.

போர்க் காலங்களில், யுத்தக் கைதிகளுக்கான தபால்கள் ஜினிவாவிலுள்ள [illegible] தான் கைதிகளுக்கு அனுப்பப்படும்.

அறம் வளர்க்கும் இந்த அழகூரில், நுண்பொருள் செய்திறனும் உண்டு. கடிகாரம், கம்பளிப்போர்வைகள், விலையுயர்ந்த மிதியடிகள், பட்டுப்பட்டாடைகள், சரிகைவேலைப்பாடுள்ள ஆடைகள், இவை இங்கு இப்போதும் செழித்துள்ள கைத்தொழில்கள்.

ஜினிவாவில் கூடிக்கூடிப் பேசிய, வல்லரசுத் தலைவர்கள், அதன் வரலாறு தரும் அரும் பாடத்தைப் பெற்றிருந்தால், போரற்ற உலகைக் காணலாம். பார்ப்போம்.

ஐம்பது நாள் பொறுத்துக்கொள்ளுங்கள்!

எவ்வளவோ காலமாகப் பொறுத்துக்கொண்டிருக்கிறீர்கள் — பசி — பட்டினி — வேலையில்லாத் திண்டாட்டம் — வேதனை — எல்லாவற்றையும் தாங்கிக்கொண்டிருந்தீர்கள். இன்னும் ஒரு ஐம்பது நாட்கள், பல்லைக் கடித்துக்கொண்டு இருங்கள்; பிறகு பாருங்கள், தேனும் பாலும் வழிந்தோடும், திகைப்பும் தொல்லையும் தொலைந்தேபோகும்; அரிசி விலை ரூபாய்க்கு ஆறு படி, கட்டை எட்டணா, நெய் ஒரு ரூபாய், சக்கரை நாலணா இப்படிச் சகல வஸ்துக்களின் விலையும் மளமளவென்று இறங்கிவிடும் — தேசத்திலே புது தேஜஸ், உள்ளத்திலே புது தெம்பு, அறுபதாண்டுக் கிழவர் இருபதாண்டு இளைஞர்போலாவார், அங்கம் இளமையம். எல்லார்க்கும் இன்பம் — இங்குமட்டுமல்ல, உலகமெங்கும் — சிங்மன்ரீ, சமாதானப்பிரியராகிவிடப்போகிறார், டல்லசும் மலடோவும் போட்டி போட்டுக்கொண்டு அணுகுண்டுகளை அழித்துவிடப்போகிறார்கள். பிரான்சும் போர்ச்சுகலும் டில்லி சென்று தோப்புக்கரணம் போடப்போகின்றன, என்னென்ன அதிசயமெல்லாமோ நடைபெறப் போகின்றன; ஐம்பது நாள் தவணை கொடுங்கள், ஐயங்கார் ஸ்வாமிகள், அதற்கான காரியத்தில் ஈடுபட்டுவிட்டார்கள் — ஐந்தாறு நாட்களாக அரும்பாடுபடுகிறார்கள், இந்த அவனி எல்லாம் 'க்ஷேமம்' அடைய வேண்டும் என்ற உத்தமமான நோக்கத்துக்காக.

இவ்வளவு சுலபத்திலே உலக சமாதானமும் சுபிட்சமும் பெற வழி இருப்பது தெரியாமல், பைத்தியக்காரர்கள், ஜினிவா மகாநாடு என்கிறார்கள், மெண்டிஸ்-பிரான்ஸ், சோ-இன்-லாய் சந்திப்பு என்று பேசுகிறார்கள் டில்லிக்கு சோ-இன்-லாய் வருகிறார், சர்ச்சில் அமெரிக்கா போகிறார், என்று எதை எதையோ அளக்கிறார்கள். ஐந்தாண்டுத் திட்டம், அமெரிக்க உதவி, தேசீயக் கடன் திட்டம் என்று கவைக்குதவாத விஷயமெல்லாம் பேசுகிறார்கள். ஒரு 50 நாளில், சகல ரோகமும் தீர்ந்துவிடப்போகிறது; சுபிட்சமும் சாந்தியும் தாண்டவமாடப்போகிறது, அஷ்டலட்சுமியும் பிரசன்னமாகப் போகிறார்கள். இது தெரியாமல், வீணாக விசாரப்பட்டுக் கொண்டு, உலகிலே போர் மூளாது இருக்க வழி என்ன, மக்கள் பட்டினியால் மாளாதிருக்க மார்க்கம் என்ன என்று எண்ணி எண்ணி மனதைப் போட்டுக் குழப்பிக் கொள்கிறார்கள். மகானுபாவர்கள், திருமதாரிகள், வைஷ்ணவர்கள், லோக சம்ரட்சணார்த்தம், மாபெரும் யாகம் நடத்திக்கொண்டு வருகிறார்கள், பத்ரிநாத்தில், ஜூன் 21 முதல்! 56 நாட்கள் நித்ய யாகமாம்! பிறகு பாருங்களேன் யோகத்தை! தொட்டதெல்லாம் தங்கம்! பட்டமரம் துளிர்த்துவிடும்! சாமான்யமான யாகமல்ல, சாட்சாத் வரதாச்சாரியார், ஐ. ஜீ. வேலை பார்த்து ரிடயரானவர் நடத்திவைக்கும் யாகமாக்கும்! ஆமாம் ஆறு இலட்ச ரூபாய் செலவு! நெய்மட்டும் ஆயிரம் டின்கள்! சமாராதனைக்குக் குறைவு கிடையாது. எப்படி ஜீரணமாகும் என்று நீங்களொன்றும் கவலைப்பட வேண்டாம் 10,00,00,000 முறை மந்திர உச்சாடனம் செய்யப்போகிறார்கள்! ஆயிரம் டின்னல்லவா நெய்! ஆறு இலட்சமல்லவா செலவு!!

ஒரு யாகம் செய்வதன் மூலம், லோக சம்ரட்சணம் செய்துவிட முடியும் என்றால், ஏன் சார், இவர்கள் ராபர்ட் கிளைவ் வந்த காலத்திலேயே இதைச் செய்து, வெள்ளைக்காரனைத் துவம்சப்படுத்தி இருந்திருக்கக்கூடாது. தாது வருஷப் பஞ்சம், வங்கப் பஞ்சம், பீகார் பூகம்பம், அசாம் வெள்ளம், காலரா, பிளேக், அம்மை, பட்டினிச் சாவு — இப்படி அடுக்கடுக்காக அவதி வந்தபோது இந்த ஐயங்கார் ஸ்வாமிகள் ஒரு யாகம் செய்து, லோகத்தைக் காப்பாற்றவில்லை, என்றெல்லாம் கேட்கத் தோன்றும் உங்களுக்கு. ஆமாம், விதண்டாவாதிகளல்லவா நீங்கள். உலகமே உருண்டை என்று என்று பேசும் அடாவடிப பேர்வழிகள், உங்களுக்கென்ன தெரியும், அவர்கள் படும் கஷ்டம். மனதிலே உள்ள அபிலாஷை! ஆயிரம் டின் நெய்! ஆறு இலட்சம் ரூபாய் செலவு! உங்கள் பொருட்டுத்தான்!! சந்தேகமிருக்கும் உங்களுக்கு, இதனால் என்ன பலன் ஏற்பட முடியும் என்று. ஐம்பது நாள் போகட்டும், திரும்பி வரட்டும் திருப்பிடமக்கள், பாரும் கண்ணாலே. யாகத்தின் பலன் ஸ்பஷ்டமாகத் தெரியும்! மேனி பளபளப்பு கண்டபிறகாவது, உண்மையை ஒப்புக் கொள்வீர்கள். ஐம்பது நாள் பொறுங்கள்; ஐம்பதே நாள்!!

வருந்துகிறோம்

நமது திராவிட நாடு அலுவலகத்தில் அச்சுக்கோர்ப்பாளராக இருந்து அருந்தொண்டாற்றிவந்த தோழர் எஸ். குப்புசாமி சிலநாள் காய்ச்சலால் தாக்கப்பட்டு, 19-6-54 சனியன்று உயிர் நீத்தார். தோழர் குப்புசாமி நமது நிலையம் தோன்றிய காலம் முதல் பணியாற்றி வந்தவர் — அடக்கமே உருவானவர். இவருடைய அளவுகடந்த அடக்கத்தால் தான், இப்படியொருவர் நம் அலுவலகத்தில் பணியாற்றுகிறார் என்று நம் நெருங்கிய தோழர்களுக்குக் கூட அறியமுடியாமற் போய்விட்டது. அலுவலகத்திலும், தோழர்களிடமும் வீட்டிலும் எங்கும் எப்பொழுதும் பொறுமையுடனே தான் நடந்து கொள்வார். நல்ல குணங்களுக்கு இருப்பிடமாயிருந்த தோழர் இந்த இளவயதிலேயே, தன் துணைவியை தவிக்க விட்டுவிட்டு இறந்துவிட்டார் என்பதை எண்ணும்போது நம் வேதனை பன்மடங்காகிறது. அவரின் பிரிவால் வாடும் அவரது துணைவியாருக்கும் உறவினருக்கும் நம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

திராவிடநாடு

காஞ்சி] 27—6—54 [ஞாயிறு

வீரர், வீரர்தான்!

தளபதி கரியப்பா, இப்போது ஆஸ்திரேலிய நாட்டிலே, இந்தியத் தூதுவராக அலுவல் பார்க்கிறார். அவர் அரசியல் உலகிலே வளர்ந்தவரல்ல, பாசறையிலே பயிற்சி பெற்று ராணுவ அதிகாரியாகி, களம் பல கண்டு, வாகைசூடியவர். எனவே அவருக்கு, சுற்றிவளைத்துப் பேசுவது, நெஞ்சை நெகிழச் செய்வது, போன்ற பேச்சு முறையில் பழக்கமும் கிடையாது, நம்பிக்கையும் இருக்கமுடியாது, உள்ளத்தில் பட்டதை வெளிப்படையாகக் கூறுகிறார். அது தேவையுங்கூட!

பெரும் பணம் செலவாகிறது வெளிநாடுகளிலே, கொலுவிருக்கும் தூதர்களுக்கு. கோடிக் கணக்கிலே பணத்தைக் கொடுத்துவிட்டு, உலகிலே, இந்தியாவுக்கு மதிப்பும் உரிமையும், சலுகையும் வாய்ப்பும், தகுதிக்குத்தக்க அளவு கிடைக்குமென்று எண்ணிக் கொள்கிறார்கள். பெரும்பாலான தூதர்கள், தாம் கொலுவிருக்கும் நாட்டுப்பழக்க வழக்கத்திலே மூழ்கிப் போகிறார்கள், புன்னகை புரிந்தும், விருந்து கேளிக்கைகள் நடத்தியும், கோலாகலவாழ்வு நடத்தி, ஏழையின் வரிப் பணத்தைப் பாழாக்குகிறார்கள். நேரு பண்டிதரின் புகழ் பாடுகிறார்கள்; வேறு உருப்படியான செயல் புரியக்காணோம். மோசடி செய்து, நமது பணத்தை ஏப்பம் விடுவதைக் கூட இவர்களால் தடுக்கவோ, கண்டு பிடிக்கவோ, முடிவதில்லை. அவ்வப்போது வெளிவரும் வேதனைதரும் செய்திகள், வெட்கத்தையும் தருகின்றன! துணிவுஉள்ளவனெல்லாம் பணத்தை அள்ளிக்கொள்கிறான்—ஓட்டை மோட்டாரும் உடைந்த யந்திரமும், புழுத்த கோதுமையும் கொடுத்துவிட்டு.

கரியப்பா, இந்தக் கூட்டத்தாரில் சேராது இருப்பவர். இப்போது அவர் பார்க்கும் வேலையே அவருக்குப் புதிது. எனினும், அவர்பயிற்சி பெற்ற ராஜதந்திரியாக இல்லாமலிருப்பது, நலனையே தந்திருக்கிறது.

ஆஸ்திரேலியா நாடு அளவில் பெரியது—வளம் மிகுந்தது ஆனால் குடிவளம் குறைவு. பலலாயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களில் கால்நடைகளை மேயவிடுவார்கள் — ஒரு காட்டு ராஜா அதற்குச் சொந்தக்காரனாக இருப்பான், அவனுக்குக் குற்றேவல் புரியும் சிறு கூட்டம் அங்கு குடி இருக்கும், பெரிய நகரங்களில மக்கள் ஏராளமாக உள்ளனர், ஆனால் மக்கள் அதிகமில்லாத பகுதியே ஆஸ்திரேலியாவில் மிகுதி.

உலகில் பல்வேறு நாடுகளில், ஜனத்தொகை அதிகமாகி, இடநெருக்கடியும், வாழ்க்கை வசதிக் குறைபாடும் மிகுந்திருக்கிறது, ஆனால் ஆஸ்திரேலியாவில், குடிவளம், அளவுக்கும் வளத்துக்கும் தகுந்தபடி இல்லை. உலகம் ஒன்று என்றும், ஒரு நாடு மற்றோர் நாட்டுக்கு உதவுதல் வேண்டும் என்றும். உபதேசம் பேசும் குழுவில ஆஸ்திரேலியா இருக்கிறது. ஆனால் வெளியார் அங்கு குடி ஏறுவதை மூர்க்கத்தனமாகத் தடுத்துவிடுகிறது.

வெளியார்—என்றால், வெள்ளையரல்லாதார்—கருப்பர், என்பது தான் பொருள்!

கருப்பர்கள் குடி ஏறினால், நாடு கெட்டுவிடுமாம், வாழ்க்கைத்தரம் படுத்துவிடுமாம், நாகரிகம் நசித்துவிடுமாம்! எனவே, கருப்பர், குடி ஏறக்கூடாது என்று கடுமையான தடை விதித்திருக்கிறது ஆஸ்திரேலியா.

பிரிட்டிஷ் காமன்வெல்த்தில், ஆஸ்திரேலியா இருக்கிறது, இந்தியாவும் இடம் பெற்றிருக்கிறது—சம உரிமையும் உண்டு. நேருபண்டிதரைப் புகழ்வதிலே ஆஸ்திரேலியா பஞ்சம் காட்டுவதில்லை. உலகப் பிரச்னைகளைக் குறித்து விவாதிக்க, டில்லிக்கு வரவும் தயங்குவதில்லை. ஆஸ்திரேலியா வெளி நாட்டு விவகார மந்திரி கேசி இந்தத் திங்கள் கூட நேருபண்டிதரைக் கண்டு அளவளாவினர், அவருடைய அபாரமான செல்வாக்கு கண்டு அதிசயம் காட்டினார், பாராட்டினார்! எனினும் நேருபண்டிதரின் 'கருப்பர்கள்' ஆஸ்திரேலியாவுக்குள் குடி ஏறக் கூடாது! தரம் கெட்டுவிடும்!! நிறத்திமிர் இந்த அளவுக்கு இருக்கிறது—கேசி இதையும் விட மறக்கிறார், டில்லியில் விருந்துண்டு உபசாரம் பேசவும் முன்வருகிறார்!

இந்தக் கேசியின் ஆஸ்திரேலியாவில், நமக்கு, கருப்பருக்கு, இடம் கிடையாது, ஆனால் இதே கேசி முன்பு வங்காள நாட்டுக் கவர்னராக ஆட்சி செய்தார்! அனுமதித்தார்கள்!!

நிறத்திமிர் போக்க, நாசுக்கான பேச்சு பயன்படாது — உள்ளதை உள்ளபடி கூறவும், நிறத்திமிர் கொண்டோரின் உறவு கூடாது என்று அறிவிக்கவும் துணிவு வேண்டும். ராஜதந்திரிகள் இந்தத் துணிவு பெறமாட்டார்கள் — துரைமார்கள் பாஷையில் பேசுவர், நடனமாடுவர், நனிநிகளுக்கு விருந்தளிப்பர், இம்முறையில் சென்று, நிறத்திமிரைக் குறைத்திடலாம் என்று எண்ணுகிறார்கள்.

தளபதி கரியப்பா, இத்தகைய போக்கினரல்ல—எனவே, ஆஸ்திரேலியா காட்டும் நிறத்திமிர் கண்டு அவரால் சகித்துக்கொள்ளமுடியவில்லை, வந்தது வரட்டும் என்று, தக்கபடி சூடு கொடுத்திருக்கிறார்.

ஆஸ்திரேலியாநாட்டில் குயின்ஸ்லாந்து பகுதியில் சுற்றுப்பயணம் செய்தார், கரியப்பா. செழிப்பான பிரதேசம்! இயற்கைச் செல்வம் ஏராளம். தூங்கிக்கிடக்கிறது. குடிவளம் இல்லை! இயற்கையின் செல்வத்தைப் பயன்படுத்தப் போதுமான மக்கள் இங்கு இருந்தால் எவ்வளவு வளம்கொழிக்கும் என்று எண்ணினார். இந்திய பூபாகத்திலும், பிற இடங்கள் சிலவற்றிலும் மக்கள் தொகை அளவுக்கதிகமாகப் பெருகி, இயற்கைக்கு பெருஞ்சுமையாகிவிட்டதை நினைத்துப் பார்த்தார்! ஏன் அந்த மக்கள், இங்கு குடி ஏறக்கூடாது! பிரிட்டிஷ் காமன்வெல்த், ஒரு குடும்பம் என்கிறார்களே — இங்கே குடிவளம் இல்லை. இந்திய பூபாகத்திலேயோ மக்கள் தொகை வளர்ந்து, நெருக்கடிக் கட்டமே ஏற்பட்டிருக்கிறது;

ஏன் இந்த குடி ஏற விடக்கூடாது என்று எண்ணினர். கருப்பருக்கு இங்கு இடம் தரமாட்டோம் என்ற ஆஸ்திரேலியா கூறும் நிறத்திமிர் பேச்சு நினைவிற்கு வந்தது. வீரரல்லவா, சரியான சூடு கொடுத்தார்.

நிருபர்களிடம், "தோல் கருப்பா, வெளுப்பா என்பதில்தான் அதிக அக்கறை காட்டுகிறீர்கள். மனதில் இருப்பது என்ன என்று அறிந்து கொள்ளக் கவலைப்படுவதில்லை. இங்கு நீங்கள் 90 இலட்சம் பேர் தான் இருக்கிறீர்கள். இந்த நாடு வளம்பெற வெளிநாட்டார் குடி ஏறினால், எவ்வளவு உதவியாக இருக்கும், தெரியுமா?" என்று கேட்டிருக்கிறார்.

நிறத்திமிரை, இவ்வளவு வீரமாகக் கண்டித்து, அது எவ்வளவு பைத்யக்காரத்தனமான போக்கு என்பதை இடித்துக் காட்டி, ஆஸ்திரேலிய சர்க்கார் திடுக்கிட்டுப் போகும்படி செய்த கரியப்பாவை பாராட்டுகிறோம். யாராவது ஒருவர் இதுபோல இடித்துக் காட்டினாலொழிய பித்தம் குறையாது, திமிர ஒழியாது.

ஒரு நாடு வேறோர் நாட்டை அடக்கி ஆதிக்கம் செலுத்துவதும், சுரண்டிப் பிழைப்பதும் கொடுமை நிறைந்தது, மடமையும்கூட. ஆனால், நிறத்திமிர் காட்டி இயற்கை வளத்தையும் பாழாக்கிக்கொள்வது பேதமையாகும். இந்தியாவுடன் குலவுவதாகப் பாவனை காட்டிக் கொண்டே, இழிவாக நடத்தும் போக்கை, கரியப்பா கண்டித்தது, ஆஸ்திரேலிய சர்க்காரில் பரபரப்பை உண்டாக்காமலிருக்க முடியாது. ஆஸ்திரேலிய பத்திரிகைகள், கரியப்பாவின் பேச்சைக் கண்டித்துள்ளன. ஏஜ் என்ற இதழ் கரியப்பா, ஆஸ்திரேலியாவின் கொள்கையைப் புரிந்துகொள்ளாமல் பேசியிருக்கிறார் என்று மழுப்பி இருக்கிறது. நிறத்திமிர் கொண்டவர்கள், கரியப்பாவை வன்மையாகக் கண்டிக்கப்போகிறார்கள். ராஜதந்திரிகளின் வட்டாரத்தில், கரியப்பா இப்படிப் பச்சையாகப் பேசி இருக்கக்கூடாது என்று பேசப்படும். இந்திய சர்க்கார்கூட, கரியப்பாவின் பேச்சு, இவ்வளவு வெளிப்படையாக இருந்திருக்கக் கூடாது என்று கருதக்கூடும். ஆனால், கரியப்பாவின் வீரப்பேச்சு, பல நாடுகளைச் சிந்திக்கச் செய்யும். நிறத்திமிர் இதனால் ஒழிந்துவிடும் என்று கூறிட முடியாது என்றாலும் நிறத்திமிர் எவ்வளவு அநாகரீகமானது என்பதைப் பலரும் உணரும்படிச் செய்ய, அவர் உரை நிச்சயமாகப் பயன்படும்.

பிரிட்டிஷ் காமன்வெல்த்தில் உள்ள ஆஸ்திரேலியா காட்டும் நிறத்திமிர், இந்தியாவையும் பாகிஸ்தானையும் பொது உடைமையின் அணைப்பிலே கொண்டுபோய்க் கூடச் சேர்க்க உதவும் என்றும் கரியப்பா, ஒரு எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

கம்யூனிசம், ஜனநாயகத்தைக் குலைக்கிறது; ஜனநாயக நாடுகளே! வாரீர், ஒரு முகாம் அமைப்போம்! என்று ஓயாமல் பேசுகிறார் கேசி துரை! கருப்பர் என்று கூறி இழிவுபடுத்திக்கொண்டு, ஜனநாயகமும் பேசும் ஆஸ்திரேலியாவின் நேசத்தைக் காட்டிலும், சோவியத் கூட்டுறவு மேலானது என்ற எண்ணம் யாருக்கும் ஏற்படத்தானே செய்யும்.

நிறத்திமிரின் மண்டையில் அடிப்பதுபோலப் பேசினார் கரியப்பா— அது ராஜதந்திரப்பேச்சாக இல்லாமலிருக்கலாம்—வீரம் நிரம்ப இருக்கிறது—வீரர் வீரர்தான்!!

★

ஜூன் 30

ஜூன் 30! உலகெங்கும் உள்ள விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் மகத்தான நாள். மறைந்து கிடக்கும் உண்மைகளில் ஒரு சிலவேனும் கண்டறிய அந்த நாள் பயன்படும் என்று அவர்கள் நம்புகிறார்கள் மேதினிஉய்ய. மேலும் சில உண்மைகளை ஆய்ந்தறிந்து மனித குல மேம்பாட்டுக்கு வழி கோலலாம் என்று எண்ணுகிறார்கள். ஜூன்-30, முழு சூரிய கிரஹணம்!!

ப்பூ! இதுதானா! இதற்கா விஞ்ஞானிகள் வரிந்துகட்டிக்கொண்டு நிற்கிறார்கள் என்று கேட்பார் விஞ்ஞானத்தை மதித்திடும் மாண்பு பெறாதார்.

சுப்பா சாஸ்திரிக்கும் குப்பணைய்யங்காருக்கும், சூரிய கிரஹணம், தட்சணை தரும், 'மற்றோர் நாள்' பக்குவமறியாப் பாமரருக்கு, அது ஓர் பாழ் நாள்! தர்ப்பையும் எள்ளும் தண்ணீரும் செலவாகும் நாள். கிரஹணம், என்றால் இவர்களுக்கு 'பீடை' என்று பொருள். அந்தப் பீடை புரோகிதருக்குக் கொஞ்சம் காசு கொடுத்தால், ஒழிந்துபோகும். குளித்துவிட்டு கும்பிட்டுவிட்டு, பீடையைத் தொலைத்துக்கொள்ள வேண்டும்.

விஞ்ஞானி, அந்த நாளை, அதி அற்புதமானதோர் நாளாகக் கருதுகிறான். இயற்கையில் புதைந்துகிடக்கும் இரகசியங்களைக் கண்டறிய, கிரஹண நிகழ்ச்சி பயன்படும் என்பது விஞ்ஞானியின் ஆசை. வெண்ணிலவு கண்டு காதலர் சொக்குவதும் கள்ளன் அஞ்சுவதும், அவரவர் நிலைக்கு ஏற்றவகையிலே அமையும் நிலையல்லவா! அதுபோன்றே வைதீகக் குடுக்கைகள், கிரஹணத்தைக் குறித்துக் கொள்ளும் எண்ணத்துக்கும் விஞ்ஞானியின் கருத்துக்கும், மாறுபாடு இருக்கத்தானே செய்யும்.

யாருக்கும் புரியாததைத் தாங்கள் புரிந்துகொண்டுவிட்டதாகக் கூறி மக்களை அஞ்ஞானிகளென்றும் தம்மை மெஞ்ஞானிகள் என்றும் கருதிக்கொண்டு. வழிகாட்டி, ஞானாசிரியன் என்று அந்தஸ்து கொண்டாடுவர் வைதீகர்.

விஞ்ஞானியோ, இயற்கையிலே புதைந்துள்ள சக்திகள், சூட்சமங்கள், இரகசியங்கள் அமோகம், அவைகளைக் கண்டறிவதிலே ஒரு தனி இன்பம் இருக்கிறது—அறிந்ததைக் கொண்டு மக்களின் வாழ்வின் மேம்பாட்டுக்காக வழிகாணலாம், என்று எண்ணும் பெருநோக்குடையார்.

ஜூன் 30ந் தேதி, சூரியகிரஹணம் முழு அளவில் ஏற்படுகிறது. கிரீன்லாந்து, நார்வேயின் தென்பகுதி, ஸ்வீடன், காஸ்பியன் கடலின் தென்பகுதி, வட இந்தியப்பகுதி

ஆகிய இடங்களிலே, முழு சூரிய கிரஹணம் ஏற்படும்.

இந்த நிகழ்ச்சியின்போது கிடைக்கக் கூடிய உண்மைகளைக் கண்டறிய விஞ்ஞானிகள் பல வாரங்களாக—ஏற்பாடுகளைச் செய்துகொண்டுவருகிறார்கள். விஞ்ஞானக் கருவிகளை அமைத்துக் கொண்டுள்ளனர். சில விநாடிகள் மட்டுமே, அவர்கள் ஆராய்ச்சி நடத்த இயலும். அந்தச் சில விநாடியிலே பல நூற்றாண்டுகளாக மறைந்து கிடக்கும் உண்மை சில புரிந்துவிடக்கூடும்—பல சிக்கல்கள் தீரக்கூடும்—மக்களுக்குச் சில புது நலன்களைப் பெற்றுத்தரக்கூடும். இந்த மேலான எண்ணத்துடன், பாமரரின் பாராட்டுதலையோ நன்றிகூறலையோ கூட எதிர்பார்க்காமல், விஞ்ஞானிகள் பணியாற்றிவருகின்றனர்.

வைதீகனோ, வேறு பல இயற்கை நிகழ்ச்சிகளுக்குக் கதைகள் கண்டதுபோல, இதற்கும் புராணம் தேடிப் பூரிப்படைவதோடு புது வருவாய்க்கு வழி தேடிக் கொள்கிறான்.

உலகிலே உள்ள பல முற்போக்கு நாடுகளுடன் உறவாடுவதன் விளைவாக இந்தியாகூட, இந்த ஜூன் 30ல், ஆராய்ச்சி நடத்த ராஜஸ்தானில் ஏற்பாடுசெய்திருக்கிறது. கோடைக்கானலில் உள்ள சர்க்கார் ஆராய்ச்சிக் கூடத்திலிருந்து விஞ்ஞானக் கருவிகள், ராஜஸ்தானுக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

முழுச் சூரியகிரஹணம், அடிக்கடி ஏற்படுவதில்லை—ஏற்பட்ட போதெல்லாம், விஞ்ஞான அறிவு பரவாதிருந்தபோது, விபரீதம், உற்பாதம் என்றே அதனைப் பாமர மக்கள் எண்ணினர்—அச்சமடைந்தனர்.

விராதி வீரரும், இரத்த ஆற்றிலே நீந்திச் செல்லும் கல்மனம் படைத்தவனும், தனக்குப் புரியாத ஓர் இயற்கை நிகழ்ச்சி ஏற்படக் கண்டால் பீதி அடையத்தானே செய்வர்.

கிருஸ்து பிறப்பதற்கு முன்பு, 585-ம் ஆண்டில், மீடியன் நாட்டாருக்கும் லிடியா நாட்டாருக்கும் பயங்கரமான போர் மூண்டது—களத்திலே இருதரப்பு படைகளும் கூடின ஆனால் திடீரென்று, ஒரே இருள் கப்பிக்கொண்டது—பகலில்—சூரியனைக் காணோம்! முழுசூரிய கிரஹணம்!!

ஒருவரைஒருவர் வெட்டிச்சாய்த்திடக் கூடியவர்கள், திடீரென பகல் இரவானது கண்டு, பயந்தே போயினர். என்ன விபரீதமோ தெரியவில்லையே! காய்ந்துகொண்டிருந்த கதிரவனைக் காணோம்! உயிர் கொடுக்கும் ஒளி காணோம்! பகல் இரவாகிவிட்டதே! பகவான், சபித்துவிட்டாரோ! உலகம் அழிந்துபடுமோ! என்றெல்லாம் எண்ணினார்கள், திகில்தாக்கிற்று, களத்தை விட்டு, இரு தரப்பினரும் ஓடியே விட்டார்கள்.

சீனநாட்டிலே ஒரு வேடிக்கையான சம்பவம் இதை ஒட்டி நடைபெற்றிருக்கிறது. கிருஸ்து பிறப்பதற்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற சம்பவம் என்று கூறுவர். முழு சூரிய கிரஹணம் ஏற்பட இருந்ததாம். மன்னர் மன்னன் தன் ஆஸ்தான வான சாஸ்திர நிபுணரை அழைத்து, ஆராய்ச்சி நடத்தும் படிக்கட்டளையிட்டானாம். நிபுணன், ஆராய்ச்சி நடத்தத் தன்னைத் தயாரித்துக்கொள்ள, உற்சாகம் தேடினான், மதுக்குடத்திலே!! குடம் குடமாக உள்ளே சென்றது, நிலைதடுமாறினான் நிபுணன். கண்ணெதிரே, ஏதேதோ கிரஹங்கள், நட்சத்திரங்கள். ஒளியும் இருளும் மாறிமாறித் தெரிந்தன. மேதை!!

சூரியக் கிரஹணத்தைக் கண்டு ஆராய்ச்சி நடத்தவேண்டியவன், மதுக்குடத்திலே, விசித்திர உருவங்களைக்கண்டு, மகிழ்ந்தான், வெகுண்ட மன்னன் நிபுணன் தலையைக் கொய்துவிட்டான், என்றோர் கதை கூறுவர்.

மக்கள் மனதிலே, அதிசய உணர்ச்சியையும் அச்சத்தையும் மூட்டுவதுபோலவே, பறவைகளுக்கும், மிருகங்களுக்கும், கிரஹணம் பயத்தை மூட்டுவதை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். பறவைகள் பதைபதைத்து, கூடுகளுக்குச் சென்று பதுங்கிவிடுமாம்.

இயற்கையின் சக்தியைக் கண்டறிந்தும் முறைப்படுத்தியும் மனித வாழ்வுக்கு இதம்தரச்செய்யும் மகத்தான பணியாற்றும் விஞ்ஞானிகளுக்கு, ஜூன்-30, ஒரு வாய்ப்பாகி இருக்கிறது.

இதற்குமுன்பு பெருவசதியையும் இன்பத்தையும் வளத்தையும் மனிதகுலம் பெறவேண்டி, விஞ்ஞானிகள் பாடுபடுகிறார்கள். ஆனால் அதனை ஆணவமும் ஆதிக்க வெறியும் பிடித்த அரசியல் தலைவர்கள், அழிவுக்குப் பயன்படுத்தி, விஞ்ஞானத்தையும் மக்களையும் ஒருசேர நாசமாக்க முனைகிறார்கள்.

இங்கிலாந்து நாட்டிலே பல நூற்றாண்டுகளாக, நிலக்கரிச் சுரங்க வேலை, மக்களுக்கு மிருகநிலையை உண்டாக்கிக்கொண்டு வருகிறது—எனினும் யந்திரங்கள் இயங்க இந்த நிலக்கரி தேவைப்படுகிறது—எனவே எவ்வளவு இம்சையும் இழிவும் இருப்பினும், பல பாட்டாளிகள் நிலக்கரிச் சுரங்கத் தொழிலில் உழலவேண்டி வருகிறது. இப்போது விஞ்ஞானம் தந்துள்ள அணுசக்தி, யந்திரங்களை இயங்கச் செய்யப் பயன்படுத்தப்படுமாம். இன்னும் இரண்டாண்டுகளிலே இங்கிலாந்தில், அணுசக்தியை பல தொழில் நிலையங்கள் பயன்படுத்தும் என்று உறுதி கூறுகிறார்கள். மனிதனுக்கு இதம் தர, விஞ்ஞானி புது உண்மைகளைக் கண்டறிந்து தருகிறான்—அணுசக்தி அத்தகையதுதான்—எனினும், இன்று அதைக் கொண்டுதானே உலகத்தையே அழித்துவிடுவேன் என்று வல்லரசுகளிலே உள்ள போர்வெறியர் மிரட்டுகின்றனர். தங்கள் மேலான ஆராய்ச்சிகள், இத்தகைய இழிசெயலுக்கு, இம்சைக்கு, நாசத்துக்குப் பயன்படுத்தப்படும் என்று தெரிந்து விஞ்ஞானிகளின் மனம், எவ்வளவு வேதனை அடையும்! எனினும், அவர்கள் சோர்வடையாமல், ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்குக் காரணம், விஞ்ஞானத்தை நாசத்துக்குப் பயன்படுத்துவதை போர் வெறியரின் போக்கை, மக்கள் எதிர்த்து வெற்றிபெறுவர் என்ற நம்பிக்கைதான்.

ஜூன் 30ந்தேதி இதே மேலான எண்ணத்துடன்தான் விஞ்ஞானிகள் ஆராய்ச்சி நடத்த இருக்கிறார்கள்.

கோயிற் பூனைகள்

நமது திருக்கோயில்களிலே உள்ள திருவாபரணங்கள், தங்க வெள்ளி வாகனங்கள், சாமான்கள் ஆகியவற்றின் மதிப்பு 4 41 22,330—11—5 என்று சர்க்கார் இப்போது கணக்கெடுத்திருக்கிறார்கள். கோயில் சொத்துக்களைக் கணக்குப் பார்ப்பது 'நாஸ்திகம்' தான். ஆனால் இதைச் செய்யும்படி உத்திரவிட்டவர் பரமபக்தர் ஓமந்தூர் இராமசாமிரெட்டியார்தான். ஏன் அவருக்கு இந்த எண்ணம் பிறந்ததோ தெரியவில்லை; திருக்கோயில்களிலே உள்ள திருவாபரணத்தின் வகைகளைக் கண்டறிந்து கணக்கு எடுக்கும்படி உத்திரவு பிறப்பித்தார். 1954, மார்ச்சுமாதம் இந்த வேலை ஒருவாறு முடிந்தது. கணக்கு வெளிவந்திருக்கிறது.

திருப்பதி வெங்கடேசப் பெருமாளிடம் 73 21,306—2—0 பெறுமானமுள்ள திருவாபரணம் இருக்கிறது. இப்போது 2 45,600 செலவில் வைகுண்ட அஸ்தம், நவரத்னம் இழைத்தது செய்யப்பட்டிருக்கிறது.

ரங்கநாதரிடம் 38 40 038 ரூபாய் திருவாபரணம்.

மதுரைமீனாட்சியிடம் 14,87619

ராமேஸ்வரம் ராமநாதஸ்வாமியிடம் 27,47,801

இப்படிக் கணக்குகள் உள்ளன. இதுவரை, ஆண்டு ஒன்றுக்கு ஐம்பதாயிரம் ரூபாய் அளவுவரை வருமானமோ, திருவாபரணமோ உள்ள கோயில்களில் மட்டுமே கணக்கு எடுத்திருக்கிறார்கள். இனி பத்தாயிரத்திலிருந்து ஐம்பதாயிரம் வரையில் வருமானம் உள்ள கோயில்களின் கணக்கு எடுக்கப் போகிறார்கள்.

இந்தத் திருவாபரணங்களில் சிலவற்றுக்கு, 'போட்டோ'வும் எடுத்து வைத்திருக்கிறார்களாம்!

ஏன் இப்படி ஒரு திடீர்ச் சோதனை? தலைமுறை தலைமுறையாக இந்தத் திருவாபரணங்கள் இருந்து வருகின்றன — கணக்குக் கேட்டவர் கிடையாது—சரிபார்த்தவர்கள் கிடையாது—இந்த ஓமந்தூரார் ஆஸ்தீகசிகாமணி என்கிறார்கள், இவர் ஏன் இப்படிச் சந்தேகப்பட்டுக்கொண்டு, சொத்து மதிப்பு என்ன என்று கணக்குப் பார்க்கச் சொன்னார், என்று எண்ணிடத் தோன்றும்

காரணமில்லாமல் இதைச் செய்யவில்லை

எவ்வளவோ காலத்துக்கு முன்பே செய்திருக்க வேண்டிய காரியம், துணிவு பிறக்காததால் செய்யாமலிருந்து வந்தார்கள்.

எவ்வளவோ திருட்டும் தில்லுமல்லுகளும் நடைபெற்றான பிறகு, 'கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம்' என்பது போல, இப்போது, கணக்கு எடுத்திருக்கிறார்கள்.

ஏதோ இப்போதாவது அந்தக் காரியம் நடைபெற்றதே, மகிழ்ச்சிதான்.

முடியுடைமூவேந்தர்களும், குறுநிலமன்னரும், பெருநிலக்கிழார்களும்வணிகக்கோமான்களும் திருக்கோயில்களுக்கு அளித்த திருவாபரணங்கள் யாவும், தேவாலயத்திலேயே இருந்திருக்குமானால் இப்போது உள்ளதுபோல நூறுமடங்கு இருந்திருக்கும். இப்போது உள்ளது கோயில் பூனைகள் தின்றது போக மிச்சமிருப்பது தான்! இனி பூனைகளுக்குக் கஷ்டம்தான், சந்தேகமில்லை.

கோயிற்பூனைகள் என்று சும்மா யாதைக்காரணபடியால் நாம்துடுக்குத்தனமாகக் கூறுகிறோம் என்று துளசி வில்வதாரிகள் கோபிப்பர்—நாம் கூறினது அல்ல—சைவ மெய்யன்பரும், திருக்கோயில சம்பந்தப்பட்ட சர்க்கார் அலுவலில் இருந்து வருமான, உயர் திரு. இராமச்சந்திரன செட்டியார் (கோவைக்கிழார்) அளித்த பட்டப் பெயர் கோயிற் பூனைகள் என்பது!!

*

திருவம்பலம் என்ற திருப்பதியில் திருஞானப் பிரகாச மூர்த்தி மடம் என்ற ஒரு பெயர் பெற்ற மடம் இருக்கிறது. அம்மடம் மிகப் பழமையானது.

புது ஞானப் பிரகாச சுவாமிகள் ஆதினத்துப் பீடத்திற்கு அலங்காரமாக இருந்தார். வெறும் அலங்காரர் மாத்திரம் அல்லர். கூரிய மூளை பெற்றவர்.

மடத் தலைவராகி மூன்று ஆண்டுகள் ஆயின. தாம் எண்ணினபடி இந்திரபோக வாழ்விற்கு வேண்டிய வசதிகள் கிடைக்க வகையில்லை என்று அறிந்தார்.

பொது மக்களிடம் சமய உணர்ச்சி இன்னும் குறையவில்லை; அதிலும் ஆலயம் செல்லுவதில் நம்பிக்கை போகவில்லை, ஆலயத் திருப்பணிகளில் மக்களுக்கு அதிக ஊக்கம் இன்னமும் இருக்கிறது.

நாட்டில் பல பண்டைய கோவில்களை யெல்லாம் செல்வர்கள் புதுப்பிக்கிறார்கள். படித்தவர்களோ இலட்சக்கணக்கான பணங்களைக் கொட்டுகிறார்கள். நடுத்தர மக்களும் திருவாபரணங்களைச்செய்து காணிக்கையாகத் தருகின்றார்கள். ஒரு கோயிலில் எத்தனை நகை இருந்தாலும் கோரிக்கொள்ளுகிற மக்கள் புதிதாகத் திருவாபரணங்களைத் தானம் செய்கிறார்கள். ஆகவே திருவாபரணத் திருப்பணியினால் மக்களை வலியச்சிப் பிடிக்கலாம் என்று அவர் தீர்மானித்தார்.

நடுவெம்பலத் திருக்கோயிலுகந்த பெருமானுக்கு ஒரு மோகனமாலை சாத்தவேண்டுமென்று திரு. கரு. அரு. சாமிச் செட்டியார் வேண்டிக்கொண்டார். உடனே மடத்துக்குத் தெரியப்படுத்தினர். கூடிய விலையில் ரூபாய் பதினாயிரம் அனுப்பப்பட்டது. ஒரு மாதத்தில் நகை.

திருமணம்

தர்மபுரி தி. மு. க. தோழர் எம். பி கிருஷ்ணமூர்த்தி தோழியர் பத்மாவதியை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொண்டார் என்ற செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

தயாராகி விட்டதாகச் சுவாமிகள் தெரிவித்தார்கள். செட்டியார் உடனே மடத்திற்கு வரவில்லை. சிறிது உடல் நலம் குன்றி இருந்தது. தம் செயலாளரை அனுப்பி நகையைக் கொண்டுவரும்படிச் சொன்னார். செயலாளர் வந்தார். சுவாமிகள் தாம் முன்னமேயே செய்து வைத்த ஏதோ மாலையை மெருகிட்டுச் செயலாளரிடம் கொடுத்தார். கொண்டுவந்த நகையைச் செட்டியார் பார்த்தார். அக்காலத்து விலைக்கு நகை சிறிது கூடுதலான மதிப்பைப் பெற்றிருந்தது. செட்டியார்கள் குணம் தெரியுமே! உடனே தட்டானை அழைத்து அந்நகையின் முகப்பில் தம் விலாசம் செதுக்கி வைத்து அதில் நடுவம்பலப் பெருமானுக்கு, திரு. கரு. பெரு. அரு. சாமிச் செட்டியார் உபயம் என்று எழுதி வைத்தார். எழுத்துக்கள் மிகவும் நுட்பமாய் எழுதிவைத்ததினால் ஊன்றிப் பார்த்தால்தான் தெரியும். பிறகு அதனை மடத்திற்கு அனுப்பிப் பூசையில் வைக்கச் சொன்னார். பூசையில் அது வைக்கப்பட்டது. பெயர் செதுக்கினதை மடத்தில் எவரும் கண்டுகொள்ளவில்லை. சுவாமிக்கு நகை சாத்துகிறதற்கு ஒரு நாள் குறிக்கப்பட்டது. எப்போதையும் போலவே அது இரவு 10 மணிக்குமேல் என்று விளம்பரப்படுத்தினதில யாதொரு வியப்பும் இல்லை. செட்டியாரும் ஆலயத்திற்கு வந்தார். பெருமான் நகை சாத்திக்கொண்டு திருவுலா வந்தார். நகை பேரொளியுடன் விளங்கிற்று. திருவிழாவிற்கு வந்த மக்கள் அனைவரும் செட்டியாரின் தருமசீலத்தை மெச்சிப் புகழ்ந்தார்கள்.

திருவாபரணத் திருவிழா நடந்த ஆறும் மாதம் நடுவம்பலத்துக் கோவிலில் பெருந் திருவிழா நடந்தது. செட்டியார் அங்கு போய், சுவாமியைத் தாம் சாத்தின நகையோடு காணவேண்டுமென்ற அவாவுடன் சென்றார். திருவுலாவில் சுவாமி அணிந்த நகை, முன் தாம் கொடுத்தபோது இருந்தவிதமாக ஒளி வீசவில்லை. செட்டியாருக்கு என்னவோ சிறிது ஐயம் ஏற்பட்டது. மறுநாள் அங்கேயே தங்கியிருந்து குருக்களுக்குச் சம்பாவனை கொடுத்து அந்நகையைக் காட்டும்படிச் சொன்னார். பணம் என்னதான் செய்யாது? குருக்கள் நகையைக் காட்டினார். செட்டியார் தம் விலாசம் அதன் முகப்பில் இருக்கிறதா என்று தேடினார். அதில் ஒரு முகவரியும் இருக்கவில்லை. மேலும் கற்கள் போலிக் கற்கள் என்பது செவ்வையாகத் தெரிந்தது. குருக்களோ அதேதான் செட்டியார் சாத்தின நகை என்று சத்தியம் செய்தார். செட்டியார் தாம் ஏமாந்துவிட்டதை அறிந்தார். தாம் இப்போது கண்ட நகையோ ஐந்நூறு ரூபாய்க்குமேல் போகாது. எத்தனை பெரிய களவு! இதனை யார் செய்திருக்க வேண்டும்?

மடத்தின் மூலமாக வந்த நகைகள் எல்லாம் போலி நகைகளே என்பது தெரிய வந்தது. தப்பு முழுதும் கண்டுபிடித்த பிறகு நீதிபதியிடம் சுவாமிகளைக் கைது செய்ய ஒரு உத்தரவும் பெற்றுக் கொண்டு துப்பறிபவர் மடத்திற்கு வந்தார். மடம் முழுவதும் தேடினார்கள்; சுவாமிகளைக் காணோம்.

*

இப்படிப் பலப்பல சேதிகளைத் தொகுத்துத் தந்திருக்கிறார் கோவைக்கிழார்.

போனது போக மிச்சம் இருப்பதாவது கோயிற் பூனைகளுக்கு இரையாகாமலிருக்கட்டும் என்ற எண்ணம், ஓமந்தூராருக்கு. கணக்கு எடுத்திருக்கிறார்கள்! இதுவரை பறிபோனது எத்தனை எத்தனை கோடியோ யார் கண்டார்கள்!!

★

அமெரிக்க கைங்கரியம்!

தென் அமெரிக்க நாடான கவுடிமாலாவில், அமெரிக்கா, போர்மூட்டி விட்டிருக்கிறது. அங்கு முற்போக்குக் கொள்கை கொண்ட சர்க்கார் இருப்பது, அமெரிக்காவுக்குத் தலைவலியாக இருக்கிறது. நிலமுதலைகளை அடக்க கவுடிமாலா சர்க்கார், திட்டம் அமுல் நடத்தினர். இதன்படி அமெரிக்காவிடம் இருந்து வந்த பழத்தோட்டங்கள் பறிமுதலாயின—உடனே அமெரிக்கா, கவுடிமாலா சர்க்காரைக் கவிழ்க்க, சூழ்ச்சி செய்துவிட்டது.

பாராட்டுகிறோம்

புதுவை விடுதலைப் போரிலே பங்கேற்றுப் பணியாற்றும், தி. மு. க. தோழர்களைப் பாராட்டுகிறோம்—அவர்களின் அரிய ஆற்றல் ஒரு சீரிய காரியத்துக்குப் பயன்படுவது கண்டு பெருமைப்படுகிறோம்.

பிரான்சு, சரிந்து கொண்டிருக்கும் வல்லரசு—பிடிவாதம் கொண்டது—அடக்கு முறை மூலம் வெற்றி காணலாமா என்று எண்ணுகிறது. பிரான்சு அதிகாரிகள் கொடுமைப் படுத்துவதைக் கண்டு மனம் தளராமல் பணியாற்றி வரும் தோழர்கள், புதுவை, காரைப்பகுதிகளில் புகழொளி பரப்புகிறார்கள். தி. மு. க. அவர்களை வாழ்த்துகிறது.

வீழ்ச்சிக்கு முன்பு வீறிட்டெழும் வெறி உணர்ச்சியால், பிரான்சு எதேச்சாதிகாரம், விடுதலை வீரர்களைச் சிறையில் தள்ளுகிறது. தி. மு. க. தோழர்கள் பலர் சிறைப்பட்டுள்ளனர். கொள்கைக்காக எத்தகைய கஷ்ட நஷ்டமும் ஏற்கும் உள்ள உரம் படைத்தவர்களைச் சிறைச்சாலை என்ன செய்யும்!

வாழ்க அறப்போர் வீரர்கள்!

வெல்க அறப்போர்!

தி. மு. க.

மகிழ்கிறோம்

செஞ்சீனாவின் பிரதமர் சோ—இன்—லாய் நேரு பண்டிதரின் அழைப்பை ஏற்று, டில்லி வந்து தங்குவது கண்டு மகிழ்கிறோம்.

டாலர்மழையைக்கொட்டி, இந்தியாவை இளித்தவாய் நாடாக்கிவிட எண்ணும் அமெரிக்க டல்லசுக்கு, இந்தச் சேதி பேரிடியாகும். நேரு—சோ சந்திப்பு, இந்திய—அமெரிக்கக் கூட்டுறவு அறுபட உதவுமாயின், எதிர்காலம் எழிலுடையதாக அமையும்.

சந்திப்பு, பலன் தருவதாக அமையவேண்டும்.

7. ஜமதக்னியின் வீட்டில்!

சாப்பிடும்பொழுது ஆறுமுகம் அடைந்த ஆச்சரியத்திற்கு அளவே இல்லை. இந்த மாதிரி சாப்பாட்டை அவன் வாழ்க்கையிலே ஒருதடவை கூட ருசித்ததில்லை. அன்று கண்ட மாதிரி மென்மையான அரிசியை அவன் அதற்கு முன் கண்ணால் கூடப் பார்த்ததில்லை.

சாப்பிட்டுவிட்டு வரும்போது தான் ஆறுமுகத்திற்குப் பல விஷயங்கள் புலனாயின.

கொஞ்சத்திற்குக் கொஞ்சமாவது பணம் வைத்திருந்தால் தான் உண்மையான வாழ்க்கை கிடைக்கிறது என்பது அவன் மனதில் திட்டவட்டமாகத் தெரிந்தது. உண்மையாக வாழ என்னென்ன வசதிகள் தேவையென்று தோன்றியது.

காலையிலே எழுந்து கஞ்சிக்கு அம்மாவிடம் போராடுவதும் பிடிக்காக செங்கமலத்திடம்பணம்பிடுங்கி வருவதும் அழுக்கேறிய தலையோடு திரிவதும் எவ்வளவு மட்டமான வாழ்க்கை என்பது தெரிந்தது.

உத்தமநாதபுரத்தின் சாக்கடை நாற்றமும் கேட்கச்சகிக்காத மொழியில் வார்த்தைகளும் பஞ்சமும் பிணியும் போராடும் பரிதாபமுகங்களும்; அப்பப்பா......நினைக்கவே வெட்கமாயிருந்தது ஆறுமுகத்திற்கு அப்போது.

வேகவேகமாக நடந்து காரில் வந்து உட்கார்ந்தான்.

“இந்த அருமையான வேலையை விட்டு இனி அவன் விலகிக்கொள்ளவே கூடாது. கிம்மதியான பாக்ய பவனம். ருசியானசாப்பாடு. மாதம் நாற்பது ரூபாய் சம்பளம். அழகான உடைகள். தனியான கார்!

“இவைகள் எதையும் இனி இழக்கக்கூடாது! ஆம்...பாஸ்கரின் முன் கோபம் எந்தளவு போனாலும் சரி, அதைப் பொறுத்துக்கொள்ள வேண்டும். புஷ்பா அம்மா யாரோடு எப்படிச் சிநேகிதமாயிருந்தால் அவனுக்கென்ன? எது எப்படி இருந்தாலும் எல்லோரும் திருப்திப்பட நடந்து, நல்ல பேரெடுத்துக் கொண்டு இங்கேயே இருந்துவிட வேண்டும்!”

இப்படியெல்லாம் நினைத்துக் கொண்டிருக்கும் போதுதான் பெரியமுதலாளி உத்தமநாதபிள்ளை மாடியிலிருந்து மெதுவாக இறங்கி வந்தார். அவரைப் பார்த்ததும் பயந்து காரைவிட்டு இறங்கி பின் ஸீட் கதவைத் திறந்து வைத்துக் கொண்டு நின்றான், ஆறுமுகம்.

மாடிப்படிகளைத் தாண்டி அவர் காரில் வந்து ஏறுவதற்கு ஐந்து நிமிடங்களுக்கு மேலாகிவிட்டது. அவ்வளவு நிதானமாக நடந்து வந்தார்.

“அப்பாவுக்கு இருதய நோய் அதிகமாகிக்கொண்டே இருக்கிறது ......” என்று புஷ்பா செல்லமுத்துவிடம் கூறியது அவனுக்கு ஞாபகம் வந்தது.

கார் கதவை சாத்தியவண்ணமே அவரைக் குறிப்பாகப் பார்த்தான், ஆறுமுகம். அவள் கூறிய மாதிரியே அவர் முகம் களை இழந்துதான் காணப்பட்டது. தங்கக்கம்பி போட்ட கண்ணாடியோடு, வழுக்கை விழுந்த தலையில் இருந்த ஓரிரு வெள்ளி மயிர்களைச் சீவி விட்டிருந்தார் பிள்ளை. அவர்மீசை மாத்திரம் ஒரே கறுப்பாக இருந்தது ஆறுமுகத்திற்கு ஆச்சரியமாக இருந்தது.

லேசான மஸ்லிப்பா—உள்ளே போட்டிருக்கும்பனியனை எடுத்துக் காட்டியது. பூப்போன்றமல்வேட்டி, காலில் கருப்புப்பூட்ஸ். கையில் இரண்டு மோதிரங்கள். ஒன்று பச்சைக்கல். மற்றது ஏதோ ஒரு கலராகத் தெரிந்தது. இவ்வளவையும் ஒரே பார்வையில் கவனித்துக் கதவைச் சாத்தினான் ஆறுமுகம். உடனே தன்சீட்டில் ஏறிஉட்கார்ந்து கார் சாவியை மாட்டினான்.

“லேபர்கமிஷனர் ஆபீஸ் தெரியுமாடா? அங்கே ஓட்டு” என்று பிள்ளை கூறுவது அவன் காதில் விழுந்தது.

பீச்சக்கருகிலேதான் அந்த ஆபீஸ் இருக்கிறது என்று ஆறுமுகத்தின் கவனத்திற்கு வந்தது. பேசாமல் காரை ஓட்ட ஆரம்பித்தான்.

பங்களாவைவிட்டுத் தாண்டிய உடன் “மெதுவாப்போடா! காற்று ரொம்ப வாதலாக இருக்கு!” என்றார் பிள்ளை.

உடனே வேகத்தை பதினைந்து மைலுக்குக் கொண்டு வந்து ஓட்ட ஆரம்பித்தான்.

“கடைத்தெருவழியாகப்போனால் ஒரே சத்தமும், சந்தடியுமாயிருக்குமே என்றுநினைத்து,முதலாளிக்கு நன்மை செய்ய எண்ணி மௌபின் ரோடைவிட்டுத்திருப்பப் போனான் ஆறுமுகம். அதற்குள் பிள்ளை சத்தம் போட்டார். “ஏண்டா... என் இப்படிப் போறே. கடை தெரு வழியாப் போ. அங்கே

வேலையிருக்கு'' என்றார். உடனே மெயின் ரோடுக்கே திருப்பி ஓட்டினான்.

கடைத் தெருவைத் தாண்டி அடுத்தது இருக்கும் பஸ் ஸ்டாப் வந்தது. காலையிலிருந்து இரு தடவைகள் அந்த ஸ்டாப்பைத் தாண்டி இருக்கிறான், ஆறுமுகம். இரண்டு தடவைகளிலும் அவன் காரை அங்கே நிறுத்தி ஒவ்வொருவரை ஏற்றிக் கொண்டுபோயிருக்கிறான். முதலில் ஏறிய சின்ன ஓரே ஆத்திரமாக நல்லமுத்துவைத் திட்டினான். பின்னால் ஏறிய நல்லமுத்தோ அன்போடு பழகினான். அவன் காரில் முதலில் ஏற்றிச் சென்றபாஸ்கரோ அவனைக் கடுமையான வார்த்தைகளினால் அதிகாரம் செய்தார்.

பின்னால் ஏற்றிச் சென்ற புஷ்பாவோ அவனை புஷ்பாலங்காரம் செய்யாததுதான் பாக்கி! அந்தளவு வாழ்த்திப் பழகினாள்!

பெரிய இடத்திலே கார் ஓட்டுவதிலே பலபாடங்களைப் படிக்கலாம் என்று ஆறுமுகத்திற்குப் பட்டது.

இதுவரை படித்தது என்னப்பா பெரிது; இன்னும் படித்துக்கொள் என்று கூறுவதுபோல் பெரிய முதலாளியும் அந்த பஸ் ஸ்டாப் அருகில் வந்தவுடன் ''டேய், இந்த பஸ் ஸ்டாப்பைத் தாண்டி நிறுத்து!'' என்றார். இதைக்கேட்டதும் ஆறுமுகத்திற்கு ஆச்சரியம் அளவுக்கு மீறியது.

''இதுஎன்னவேடிக்கை! சொல்லிவைத்ததுபோல் இதே பஸ் ஸ்டாப்பில் முதலாளிக்குடும்பமே பலரைச் சந்திக்கிறது!'' என்று எண்ணிய வண்ணம் அவர் சொன்னபடி காரை நிறுத்தினான்.

இந்தத் தடவை காரில் ஏறியது இளம் வயதுடையவர் இல்லை ஐம்பது வயதுக்கு மேற்பட்டவபோதிகர், சிவப்பாக, தொந்தியும் தொப்பையுமா, வெற்றிலை பாக்குப் போட்டுக்கொண்டு ஆடி ஆடி நடந்து வந்து முன் ஸீட்டில் ஏறி உட்கார்ந்தார். அவர் கதவைச்சாத்தியதும் ஆறுமுகம் மறுபடியும் புறப்பட்டான்.

கொஞ்சதூரம் செல்லும்வரை முதலாளி அவர் கூடப் பேசவே இல்லை. இந்த மனிதர் இங்கு ஏன் காரில் ஏறினார் என்றே ஆறுமுகத்திற்குப் புரியவில்லை. சில நிமிஷங்களில் அவர்கள் பேச ஆரம்பித்தார்கள். ஆறுமுகம் கவனமாகக் கேட்க ஆரம்பித்தான்.

''நான் போன் செய்தபோது நீங்க தூங்கிண்டிருந்தேளா......'' என்று பல்லிளித்த வண்ணம் கேட்டார் வயோதிகர்.

பிள்ளை ''இல்லை ஜமதக்னி! மத்தியானமானாலே தூக்க பார்வலி வந்துடுது. சும்மா படுத்திருந்தேன். உன் போனை எதிர்பார்த்தபடிதானிருந்தேன்'' என்றார்.

''எல்லாக் காரியங்களையும் சரி செய்றதுக்கு மூணு மணியாயிடுத்து. தனிணிக்கு இன்னைக்கு ஷூட்டிங் வேறே. அவள் கொட்டிலேயிருந்து வருவதற்கு இரண்டு மணியாயிடுத்து'' என்றார் ஜமதக்னி பல்லிளித்துக் கொண்டே.

''சரிதான்......'' என்றஒருவார்த்தையோடு சுருக்கமாகப் பதில் கூறிவிட்டுச் சாய்ந்து உட்கார்ந்தார் பிள்ளை.

ஜமதக்னி ஆறுமுகத்தையும், பிள்ளையையும் மாறிமாறிப்பார்த்துக் கொண்டு இடையிடையே ரோடில் வேடிக்கை பார்த்த வண்ணம் இருந்தார்.

சுமார் பதினைந்து நிமிஷங்களில் 'லேபர்கமிஷன்' ஆபீஸுக்கு முன்னால் வந்து நின்றது கார். ஆறுமுகம் இறங்கிப்போய் பின்ஸீட் கதவைத் திறந்தான்

''அப்ப ஜமதக்னி......நீ என்ன செய்கிறாய்?'' என்றார் பிள்ளை.

''நீங்க இங்கே அரைமணி நேரம் இருப்பேளா?''

''உம். அரை மணி நேரத்துக்கு மேலேயே ஆகும். ஐந்து மணியிலிருந்து ஆறுமணி வரை பேசணும் என்று நோட்டீஸ் அனுப்பிச்சிருக்கார் லேபர் கமிஷனர். எதுக்கும் நீ போய் எல்லாத்தையும் சரிசெய்துட்டு காரை அனுப்பேன்!''

''ஓ......சரிங்க!''

''இந்தாப்பா, டிரைவர்! இவர் கூடப் போயிட்டு ஆறுமணிக்கு இங்கே வந்துடு!'' என்றார் பிள்ளை ஆறுமுகத்தை நோக்கி.

ஆறுமுகம் மரியாதையாகத் தலையை ஆட்டிவிட்டு காரில் ஏறி உட்கார்ந்தான். பிள்ளையைக் கண்டதும் லேபர் ஆபீஸிலிருந்து பலர் கோட்டும் சூட்டும் போட்டவர்கள் ஓடிவந்தனர்.

''அப்ப நான் வருகிறேன்......'' என்று இழுத்தார் ஜமதக்னி.

''உம்...சரி'' என்றார் பிள்ளை.

அடுத்த நொடி காரை ஓட்டினான் ஆறுமுகம்.

''எங்கே சாமி போகணும்?''

''பீச்சு வழியாப் போப்பா! அடையாற்றிற்குப் போகணும்''

''சரிங்க, சாமி'' என்று கூறிக் காரை மெரினாவில் திருப்பி ஓட்டினான். இதற்குமுன் காரில் ஏறியவர்களைப் போல இல்லை ஜமதக்னி. ஆறுமுகத்தோடு தாராளமாகப் பழகினார்.

''என்னப்பா, டிரைவர். உன் பேரென்ன?''

''ஆறுமுகங்க!''

''ஆறுமுகமா. எங்கே மில்லிலே வேலைபார்த்துக்கொண்டிருந்தியா?''

''இல்லீங்க. இன்னைக்குத்தான் இங்கே வேலைக்குச் சேர்ந்தேன்''

''இன்னைக்குத்தானா......!

''ஆமாங்க, எங்கப்பா முதலாளி பங்களாவிலே தோட்டக்காரனா இருந்தாருங்க''

''அப்படிச் சொல்லு. அதனாலே தான் உனக்கு இவ்வளவு பெரிய இடத்திலே வேலை கிடைச்சிருக்கு''

ஆறுமுகம் அதை உணர்ந்தவன் போல நன்றியோடு ஜமதக்னியைப் பார்த்தான்.

''ஆமப்பா. இது எல்லாருக்கும் கிடைக்காத அதிர்ஷ்டம், ஆறுமுகா. பட்டணத்திலே பெரிய குடும்பத்திலே ஒரு குடும்பத்தாருக்கு டிரைவராகிறது சாதாரண விஷயமா?''

''ஆது சரிங்க...'' என்றான் ஆறுமுகம். பாக்யபவனத்து வேலையின் அவசியத்தையும், அதில்கிடைக்கும் சொகுசான வாழ்க்கையையும் அவன்தான் நாலுமணிக்கே உணர்ந்து விட்டானே!

''இந்த இடத்திலே பத்திரமா, நல்ல பேரெடுத்துக்கிட்டு இரு

தக்கோ!...பெரிய இடத்திலே வேலை செய்றத்திற்கு இந்தோட [illegible]ந்தான் தேவையப்பா. ஆமாம். முதலாளிமார்கள் என்ன பேசிக் கொண்டாலும் நமக்கென்ன என்று இருக்கணும் இரண்டாவது அவங்க எங்கே போறாங்க என்னசெய்றாங்க என்பதெல்லாம் நம்ப மனசோடு வைத்துக் கொள்ளணும்!" என்றார் ஜமதக்னி.

இந்த உபதேசத்தை இதோடு மூன்றாவது தடவையாகக் கேட்கிறான் ஆறுமுகம்.

"ஆமாம், சாமி!" என்று அவர் கூறியதை உணர்ந்துகொண்டது போலப் பதிலளித்தான் ஆறுமுகம்.

இதற்குள் கார் மைலாப்பூரைத் தாண்டி அடையாற்றுக்கு வந்து விட்டது. இடது பக்கம் திரும்பும் ரோட்டில்தான் காலையிலே புஷ்பாவையும் நல்லமுத்துவையும் ஓட்டிச் சென்றான். இப்பொழுது எந்தப் பக்கம் திரும்புவது என்று ஜமதக்னியைப் பார்த்தான்.

"இப்படிப் போய் மறுபடியும் லெப்டிலே திரும்பு, ஆறுமுகம்!" என்றார் ஜமதக்னி.

உடனே காரை வளைத்து அந்தப் பக்கம் திருப்பினான். அந்தச் சந்திலே கொஞ்சதூரம் போனவுடன் பெரியவர் கூறியசந்து வந்தது. [illegible]ில் திருப்பினான். வீடே இல்லா[illegible]து அது. இரண்டு பக்கமும் [illegible]ம் ப்வுண்டுச் சுவர்கள்தான். [illegible]த் தூரம் போனவுடன் தென்னந் தோப்பு ஒன்று தெரிந்தது. அந்தத் தோப்புக்குள் சிறிய பங்களா இருந்தது. மெதுவாகக் காரை வளைத்துக் கொண்டுபோய் தென்னை மரங்களினிடையே நிறுத்தினான்.

கார்போய் நின்றதும் அந்த வீட்டிலிருந்து ஒரு இளமங்கை ஓடிவந்து வாயிற்படியில் நின்றாள்.

பங்களாவிலிருந்து வெளிவந்த அவளுடைய நடையும், உடையும் மினுமினுத்த நகைகளும், மை தீட்டிய கண்களும் [illegible]யும், கண்டோரை வசீகரிக்கும் உடலமைப்பும் ஆறுமுகத்தைத் திகைக்க வைத்தது. இதேதடா [illegible]போனாலும் ஒரே மர்மமாயிருக்கிறதே என்ற ஆச்சரியத்தோடு காரை நிறுத்திவிட்டு இறங்கி ஜமதக்னிக்கு கதவைத் திறக்கப்போனான். அதற்குள் அவரே இறங்கிவிட்டார்.

"வாப்பா, ஆறுமுகம்! உள்ளே போகலாம்!" என்றார் ஜமதக்னி.

ஆறுமுகம் தனக்கு மறுபடியும் அதிர்ஷ்டம் அடிப்பதாகவே எண்ணினான்.

நல்லமுத்துதான் அவனோடு அன்பாக பேசிய முதல் மனிதன்.

ஜமதக்னியோ நல்லமுத்துவை விட அதிக நெருக்கமாக, சமமாகப் பழகினார்.

"இதோ பாரம்மா, இவன்தான், ஆறுமுகம்! நம்ப பிள்ளையோட டிரைவர்."

"ஓ, வாப்பா!" என்று அழகை அணிசெய்யும் அவளும் கூறினாள்.

இந்த வரவேற்பு ஆறுமுகத்தின் வாழ்க்கையிலேயே ஏற்படாத புதிய அனுபவம். இவ்வளவு அழகிய சிங்காரியோடு கூடியவனிதைகளைச் சினிமாவிலேதான் ஆறுமுகம் பார்த்திருக்கிறான். இந்தப் பெண்ணும் சினிமாவில் இருப்பதாகத்தானே ஜமதக்னியின் பேச்சிலிருந்து தெரிந்தது.

"நளினிக்கு இன்றைக்கு ஷூட்டிங் [illegible]...!" என்று அவர் பிள்ளையிடம் கூறியது ஆறுமுகத்தின் ஞாபகத்திற்கு வந்தது. உடனே இவள்தான் நளினி என்று அறிந்து கொண்டான். ஒருசினிமாக்காரியின் வரவேற்புக் கிடைக்குமென்று உத்தமதாதபுரத்திலே செங்கமலத்தோடு சண்டைபோட்டுக்கொண்டிருந்த ஆறுமுகத்தின் மனதில் என்றாவது தோன்றி இருக்க முடியுமா?

"வா, ஆறுமுகம். இப்படி உட்கார்!" என்று அருகில் இருந்த பெஞ்சைக் காட்டினார் ஜமதக்னி. ஆறுமுகம் வெட்கத்தோடு பெஞ்சுக்கருகில் சென்று நின்றுகொண்டான்.

ஜமதக்னியும் நளினியும் உள்ளே சென்றனர்.

அளவில்லாத ஆனந்தம் ஆறுமுகத்திற்கு. இந்தமாதிரி பெரிய இடத்திலே இன்னும் பல ஆண்டுகளுக்கு முன்பே வேலைக்குச் சேரவில்லையே என்ற ஆயாசத்தோடு உட்கார்ந்தான்.

அவன் உட்கார்ந்த இடத்திலே இருந்து ஜமதக்னியையும் நளினியையும் பார்க்க முடியவில்லை. ஆனால் அவர்கள் பேசுவதுமாத்திரம் அவன் காதிலே விழுந்தது.

"நாழியாகவும், எங்கேவர நேரமில்லேன்னுட்டாரோன்னு பயந்துட்டேன்!" என்று கொச்சைத்தமிழிலே, ஆனால் கொஞ்சும் குரலில் அவள் பேசுவது அவன் காதிலே விழுந்தது.

"வராம என்ன, நளினி! இந்த ஜமதக்னி கூப்பிட்டு, வரமாட்டேன்னு சொல்றவா, யாரு. நம்ப வீட்டிலேயே என் என்று தானே இவ்வளவு நாளும் பார்த்துக்கிட்டிருந்தேன்.

உன்னைச்சகுந்தலைவேஷம் போட லாயக்கிலேன்னுதானே அந்த வைத்யக்காரன் சொன்னான். இதோ பார், இராத்திரி பிள்ளை வந்ததும், சரியான சமயம் பார்த்து ஒரு வார்த்தை சொல்லிவை. மன்னன், அவன் நினைத்தால் ஒரு ஸ்டுடியோவையே நடத்திடலாம்!

"என்னமோ, அப்பா, நீங்கள் சொல்றேள். பிள்ளைவயசானவர்..."

"வயசானா, என்னடியம்மா! கிழசுக்குத்தான் வாலிபம் அதிகம்! சும்மாஉன்கையாலே இரண்டுகிளாஸ் கொடுத்தாடு பின்னால் நீ வைத்ததுதான் சட்டம்."

"அது சரி, அப்பா! அவருக்கு ஒருமகனும், வயசுக்கு வந்த மகளும் இருக்கிறதா சொன்னீர்களே!"

"இருந்தா, நமக்கென்ன? மனுஷன் ஒவ்வொருத்தனுக்கும் தனித் தனியான விஷயம் என்று ஒன்றுமில்லையா, என்ன?"

"அது, சரி!"

"ஆமா, நளினி! வீரபத்திரன் வந்து போனானே?"

"ஓ......! இப்பதான், அரைமணி நேரத்திற்கு முன்!"

"என்ன, கேட்டதெல்லாம் கிடைச்சுதாமா?"

"என்னமோ, ஒரு டசன் தான் கிடைச்சுதாம். அது கூட வழக்கமா வாங்கிற ஆளிடம் கிடைக்கவில்லை

யாம். அவன் வீட்டிலே நேற்று போலீஸ் படையெடுப்பாம்! கிட்டத்தட்டப் பத்தாயிரம் ரூபாய்க்கு நஷ்டமாம்!"

"அடபாவமே! ஹும்......! இருந்தாலும் பாவாயில்லை. அவன் தான் லட்சரூபாய்க்குமேலே சம்பாதித்து விட்டானாமே. மதுவிலக்கு வந்தாலும் வந்தது. இந்த மாதிரி திருட்டுப் பசங்கதானே இப்போ பணம் சம்பாதிக்கிறாங்க!"

"அப்பா, இப்போ வாங்கிட்டு வந்திருக்கிற சரக்குகூட எப்போதும்போல இல்லை. ஒரே நாற்றமா இருக்கு"

"சரிதான் அதுக்குள்ளேயே பதம்பார்த்தாச்சா. இது ஏது இழவாயிருக்கே. நான் தலை கீழா நின்னு அவனை இங்கு கொண்டு வந்து சேர்க்கிறேன். நீ அதுக்கு முன்னடியே மயக்கமா விழுந்துடுவே போல் இருக்கே!"

"சேச்சே. அப்படி இல்லெ அப்பா! ஒரு டசன் பாட்டிலை பீரோவிலே வைத்துப் பூட்டிவிட்டு நான் எப்படி வாயிற்படியிலே உட்கார்ந்திருக்க முடியும். அதோடு இது கொஞ்சம் புது தினுசான பாட்டிலா இருக்கே என்று ஒண்ணே ஒண்ணை உடைச்சு ருசி பார்த்தேன். இதோ முக்கால் பாட்டிலை அப்படியேவைத்திருக்கிறேன்"

இதற்குப் பிறகு நடந்த சம்பாஷணைகள் ஆறுமுகத்தின் காதில் விழவில்லை.

எப்போதாவது காசு நிறையக் கிடைத்தால் அஞ்சலை அவனுக்கு ஒரு பொந்தை கள் வாங்கிக்கொடுப்பாள். அதுவும் நாலு ஆண்டுகளுக்கு முன். பின்னால் கள்ளுக்கடைகளை வைத்திருப்பதால்சேரியிலிருப்பவர்கள் சுகமாக வாழவில்லையென்றும், மூடியவுடன் அவர்கள் வாழ்க்கை ஒரே உயரமாக வளர்ந்துவிடுமென்றும் காரிலேவந்து பல பெரிய மனிதர்கள் கூறினார்கள். அவர்கள் வந்துபோன பிறகு உத்தமநாதபுரத்திலே இருந்த கள்ளுக்கடை மூடப்பட்டது. அதற்குபபிறகு இந்த ஊரிலே எங்குமே குடிகிடைக்காது என்று அடிக்கடி பலர் கூறக் கேட்டிருக்கிறான்.

ஆனால் அந்த மாதிரி மதுவிலக்கு எதுவுமிருப்பதாகவே நளினியும்—ஜமதக்னியும் பேசுவதிலிருந்து படவில்லை. ஒரு வேளை நம்மைப்போல ஏழைகளுக்குத்தான் மதுவிலக்குப் போலும் என்று எண்ணிக்கொண்டு உட்கார்ந்திருந்தான், ஆறுமுகம்.

ஐந்தேமுக்கால் மணிக்குக் கூட மணி அடித்தது, நளினி வீட்டு கடிகாரம்.

ஜமதக்னி வெளியே வந்தார். நளினியும் பின்னடியே வந்தாள்.

"என்னடியம்மா, நான் போய் ஆளை அனுப்புகிறேன். சரியாபத்து மணிக்கு வர்றேன். அதற்குள் சரி செய்துவிடு. கிழவன்...கொஞ்சம் சரசமா இருந்திண்டாலேபோதும்... தானே விழுந்திடுவான்" என்று அவர் கூறிக் கொண்டு வருவது அவன் காதிலே விழுந்தது.

"என்னமோ, என்னால் முடிந்ததைச் செய்துபார்க்கிறேன்!" என்று கூறிக் கொண்டே நளினி காரின் அருகில் வந்தாள்.

ஜமதக்னி காரில் ஏறிக் கொண்டார்.

"நான் வரேனுங்க..." என்று இழுத்தான் ஆறுமுகம்.

"சீக்கிரமா, அழைத்துக்கொண்டு வந்துடு ஆறுமுகம்!"

"சரிங்க!" என்று, அவள் கூறியதின் முழு அர்த்தத்தையும் விளங்கிக் கொண்டவன் மாதிரி பதிலளித்துவிட்டுப் புறப்பட்டான் ஆறுமுகம்.

கால்மணி நேரத்தில் லேபர் ஆபீஸ் முன்னிலையில் வந்து காரை நிறுத்தினான் ஆறுமுகம்.

அதுவரை பேசாமல் உட்கார்ந்து கொண்டு வந்தார் ஜமதக்னி. புதிய சரக்கை அவரும் ருசி பார்த்ததின் விளைவாக அவர்முகமெல்லாம் ஒரே வியர்வைத் துளியாக இருந்தது. வாய்நிறைய வெற்றிலையைப் போட்டுக் கொண்டிருந்தபோதிலும் அவர் மூச்சு ஆறுமுகத்தின் மேல் படும் போதெல்லாம், ஒரே நாற்றம் அடித்துக் கொண்டிருந்தது.

ஒரு வகையிலே ஆறுமுகத்திற்கு அது இன்பமாகவே இருந்தது.

ஆனால் ருசிபார்க்கவில்லையே என்று ஏக்கமும் வந்தது!

"ஆறுமுகம்..." என்று உளறினார், ஜமதக்னி.

"சாமி..." என்றான்.

"இந்தா, ஐயாவைப் பத்திரமாக அழைத்துக்கொண்டுபோய்,கவனிச்சுக்கோ! என்னவேணுமென்றாலும் பாப்பாவைக் கேளு. நான் பீச்சிலேயே படுத்துக் கிடந்துட்டு இரவு ஒன்பதுப்த்துக்கு வந்து சேர்றேன்!"

"சரி, சாமி!"

கார் [illegible] சத்தத்தைக் கேட்ட[illegible]ன்னவோ, அந்த நிமிஷமே [illegible] ஆபிஸிலிருந்து வெளியே [illegible]தார், பிள்ளை.

வீட்டை [illegible]ட்டுக்கிளம்பியதைவிட இன்னும் களைப்போடு தோற்றமளித்தார் அவர். மிகவும் மெதுவாக கைத்தடியை [illegible] ஊன்றியவண்ணம் வந்து காரில் ஏறினர்.

அவர் [illegible]றியவுடன் ஜமதக்னி கீழே இ[illegible] "நான் கொஞ்ச நேரத்தில் [illegible]றேன். நீங்கபோய் இருக்கே[illegible]..." என்றார்.

"என்ன[illegible], நீ எங்கபோறே. ஒரே களை[illegible] இருக்கு!"

"நம்மவிஷயமாகத்தானுங்க. நீங்க போய் இருங்க. குழந்தை நாலுமணியிலிருந்து துடிச்சிக்கிட்டு இருக்கா, உங்களைப் பார்க்க!"

ஹூம்......சரி. அப்போ நீ, போயிட்டு சீக்கிரமா வந்துடு!"

"இதோ வந்துடறேனுங்க......" என்று கூறி ஜமதக்னி நகர்ந்தார்.

ஆறுமுகம் காரை ஓட்டினான். இந்தத் தடவை ஐயா சொல்லாமலே அவனே ஓட்டிக்கொண்டு போய் ஜமதக்னியின் வீட்டிலே நிறுத்தினான்.

(தொடரும்)

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi St., Kancheepuram.